

# ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்

**ராஜாஜி ராஜகோபாலன்**

# ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்

## ராஜாஜி ராஜகோபாலன்

**வளரி**

எழுத்துக்கூடம்

32, கீழரத வீதி

மானாமதுரை – 630 606

சிவகங்கை மாவட்டம்

விலை :75.00

வளரி எழுத்துக்கூடம் வெளியீடு - 2

ஒருவழிபோக்கனின் வாக்கு மூலம்

@இராஜாஜி ராஜகோபாலன்

Oru Vazhippokkanin Vaakkumoolam

By Rajaji Rajagopalan

உரிமை கவிஞர் முதற் பதிப்பு-2014

வெளியீடு : வளரி எழுத்துக்கூடம்

32, கீழரத வீதி மானாமதுரை - 630 606

சிவகங்கை மாவட்டம்

தமிழ்நாடு .

கைபேசி: + 91 78 715 48 146

மின் அஞ்சல் : valari2009@gmail.com

அமிழ்தினும் இனிய மகள்
அருள்மொழியின் நினைவாக..

# நம்பிக்கை தரும் கவிதைகள்

**அருணா சுந்தரராசன்**

இலக்கியப் பயணத்தில் கவிதையை வழித்துணையாகக் கொண்டு பயணிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. அந்த அளவுக்கு தவிர்க்க இயலாத ஒன்றாக மாறிப் போயிருக்கிறது கவிதை.

இராஜாஜி ராஜகோபாலன் ஈழத்திலிருந்து கனடாவுக்குச் சென்று அங்கு வசித்து வருபவர். ஈழத்தமிழர்களிடம் ஒரு தனித்தன்மை உண்டு. இன ஒடுக்கு முறையின் காரணமாக பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து அவலச் சூழலில் உழன்றாலும், தங்களுக்குப் புகலிடம் அளித்துள்ள நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்து வரும் அவர்கள், தங்களின் கலை, கலாசாரம், பண்பாட்டுக் கூறுகளை எந்த நிலையிலும் கொடுக்காது, விலக்கிக் கொள்ளாது வாழ்ந்து வருபவர்கள். இந்த மாண்பு பாராட்டத்தக்கது.

ஈழத்தின் வாழ்வியலை வெளிப்படுத்துபவைகளாக இராஜாஜி ராஜகோபாலனின் கவிதைகள் அமைந்துள்ளன. ஒரு வழிப்போக்கன் தன் பார்வையில்படுகின்ற அத்தனையையும் தான் ஒரு படைப்பாளனாக இருப்பதால், அவற்றை கவிநயத்துடன் காட்சிப் படுத்துகின்ற ஆற்றல் இராஜாஜி ராஜகோபாலனிடம் இருப்பதை உணர முடிகிறது. யாழ்ப்பாணத்து வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்த “தட்டி வான்” என்கிற வாகனம் குறித்த கவிதையின் மூலம் அந்த தட்டி வானில் பயணிக்கின்ற அனுபவத்தை நமக்குத் தருகிறது.

உயர உயரப் பறந்து எல்லா அனுபவங்களையும் காட்சிப்படுத்தும் திறமையும், ஆற்றலும் இராஜாஜி ராஜகோபாலனின் கவிச் சிறகுகளுக்கு உண்டு என்கிற நம்பிக்கைத் தருகின்ற கவிதைகள் இவை.

# ராஜாஜி ராஜகோபாலனின் கவிதைகள் மீதான ஓர் இரசனைக் குறிப்பு

## கே.எஸ்.சிவகுமாரன்

கவிஞர்கள் பல வகையினர். கவிதைகளும் பல வகைப்படும். பல விதமான பாவினங்களும் உண்டு. கவிதை தொடர்பாகப் பலதரப்பட்ட கருத்தியல்களும், வியாக்கியானங்களும் உள்ளன.

பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து நவீன கவிதையூடாக உடன் நிகழ்காலக் கவிதை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

தமிழ் பேசும் உலகிலே இப்பொழுது, தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் அரசியலையும் சமூகப் பார்வைகளையும் மக்களுக்குத் தெரிவிக்கப் பல ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

முகநூல் இணையத் தளங்கள் போன்றவற்றில் பலர் நல்ல கவிதைகளை எழுதி வருகிறார்கள்.

நல்ல கவிதைகள் என்னும் பொழுது நான் மனதில் முக்கியமாகக் கொள்வது புத்தாக்கத் தொடர்களும், சொல்லாக்கங்களும் கவிதை மொழிக்கே உரிய சொல்லோசை இன்பமும்தான்.

கவிதை என்ன கூறுகிறது என்பதை விளக்க நம்மிடையே பல புதிய விமர்சகர்கள் எழுந்துள்ளனர்.

அவர்களிடம் அந்தப் பொறுப்பை விட்டு விட்டு, அக்கவிதைகள் சொல்ல வருகின்ற கருத்துக்களை எப்படி சொல்லுகின்றன என்பதில் கூடிய கவனஞ் செலுத்துவோம்.

நண்பர் ராஜாஜி ராஜகோபாலன் அவர்கள் கொணர்ந்த **"ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்"** எனும் இந்த நூலில் அடங்கிய 34 கவிதைகள் எனது இரசனைக்கு எவ்வாறு அமைகின்றன என்பதே இந்தக் குறிப்பின் நோக்கம்.

என்னைப் பொறுத்த மட்டில் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள அனேக கவிதைகள் என்னை கவர்ந்தனவாயினும், நான் ரசித்த கவிதைகளில் வரும் சில தொடர்களை மாத்திரம் இங்கு சாட்சியமாய் தருகிறேன்.

**'பனிக்கால ரோஜாக்கள்'** எனும் கவிதை உடன் நிகழ் கால நடப்பு நிலைமைகளைக் கூறுகிறது எனலாம்.

**'பேசவந்த போதும்**
**என்னைப்**
**பார்த்துக்கொண்டிருப்பதுவே**
**போதுமென்றாய்.'**

**'சந்தியில் நின்ற சாதி**
**சதி செய்தது**
**பந்தியில் இருந்த பணம்.**
**பேய்க் கூத்தாடியது.'**

**'இறுதியில்**
**நான் ஒருவனை மணக்க**
**நீ ஒருத்தியை அணைக்க**
**காதலற்ற மணவாழ்வில்**
**கடமைக்கு வாழ்கின்றோம்'**

**'அன்று**
**உனக்கும் எனக்கும் இடையே**
**ஐந்து நிமிட**
**பஸ் பயணம்தான்**
**இன்றோ**
**பசுபிக் சமுத்திரம்**

பாயை விரித்துப்
படுத்துக்கொண்டது.'

மேற்கண்ட கவிதையில் என்னைப் பரவசப்படுத்திய வரிகளையே தந்துள்ளேன். முழுக் கவிதையையும் நீங்களே படித்துப் பாருங்கள்.

இனி கவிஞர் கையாளும் சொட்டான சொற்றொடர்கள் சிலவற்றை உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.

"ஒழுகும் நிழலின்
அணைப்பினில் அயர்வேன்" (மரங்கள் என் நண்பர்கள்)

"அருக்குக் காட்டாதை சும்மா – உன்னிலை
ஆசையில்லாமலே வந்தனான்"
"களியாணம் கட்டினால் மட்டும்தான் – என்னிலை
கைவைக்க விடுவன் கண்டியளோ!" (விடுங்கோ ஆரோ வருகினம்!)

"மழையே மனம் திறவாய்
மண்ணை நீ இவ்வளவு
மூர்க்கமாய் முத்தமிட
எப்படித்தான் முடிகிறது – என்
மனம் கவர்ந்த மங்கையை
முத்தமிடும் வழியை
மறக்காமல் சொல்வாயே".

"பெண்களே பகருங்கள் – உங்கள்
புன்னகையில் புதைந்திருக்கும் புதிர்களைப்
பகுத்தறிவது எப்படியென்று!
மௌனத்தில் மறைந்திருக்கும் மர்மத்தை
மொழிபெயர்ப்பது எவ்வாறென்று!" (பயிலாத பாடங்கள்)

"கதவுக்குத் தாழ்பாள்
கழன்று பல காலமாச்சு!" (பாத்ரூம் பாடகர்)

"மானிடத்தை மதிக்காத
மடையர்கள்
இராணுவ அரணிருந்தும்
உறங்க மறந்தார்கள்."
"அறிவுப் பட்டறைகளில்
அடிவாங்கும் உலோகங்கள்!" (சிறைச்சாலைச் செம்பருத்திகள்)

'வட்டக் கழுத்தைவிட்டு
எட்டிப் பார்க்குமோவென்று
ஒவ்வொரு சொல்லின் முடிவிலும்
இழுத்து விடுவாயே சேலையை!' (எழுதாத கடிதத்தில்தான் எத்தனையோ உள்ளன)

**'ஒரு கார் வாங்கப் போனேன்'** என்ற கவிதையையும் முழுமையாகப் படித்துப் பாருங்கள்.

**'இறைவனைக் கண்டால்...'** என்ற கவிதையும் முழுமையாகப் படிக்க வேண்டியதொன்று.

"புன்னகை ஒன்றுதான்
நிச்சயமாய்
வட்டியோடு திரும்பிவரும்
முதலீடு."

"சிரிக்கத் தெரிந்தவனுக்கும்
வைத்தியர் வீட்டுக்கும்
வெகு தூரம்."

**"மனைவியோடு ஒட்டிப் படு**

**மிச்சமெல்லாவற்றையும்**

**மனைவியே பார்த்துக்கொள்வாள்.**

**அவளிடம்**

**அவளையே புகழ்ந்தாயோ**

**ஒவ்வொரு இரவும்**

**முதலிரவு!" (புதுக் கணக்கு)**

**"அழுக்காய் இருப்பவைதான்**

**அழகை ஏந்துகின்றன." (மரங்களை நேசிப்போம்!)**

முழுமையாகப் படித்துச் சுவைக்கக் கூடிய மற்றொரு கவிதை **'என் தங்கை'**

சமுதாயப் படப்பிடிப்பும், யதார்த்தபூர்வமான பார்வையும், நகையுணர்வுச் சுவையும், அன்பையும் வெளிப்படுத்தும் ராஜாஜி ராஜகோபாலனின் இக்கவிதைகள் வாசகர்களுக்கு ஒரு புதியதென்பைத் தருவன.

அவருக்கு எனது பாராட்டுக்கள்!

# என் ஆத்மாவின் ராகங்கள்

## ராஜாஜி ராஜகோபாலன்

என் இனிய நண்பர்களே!

அன்று ஒரு அற்புதம் நிகழ்ந்தது.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் என் ஆத்மாவோடு பிணைந்து அறிதுயில் கொண்டிருந்த கவிதையுணர்வு இன்றிலிருந்து ஒரு ஆண்டுக்கு முன்னரானதொரு அதிகாலைப் பொழுதில் மீண்டும் விழித்துக்கொண்டது.

இந்த முதல் விழிப்பை ஏற்படுத்திய நண்பர்களுக்கு என் முதல் வணக்கம்.

இன்றும் நன்றாய் நினைவிருக்கிறது. பதின்மப் பருவத்தில் என் ஆத்மா கவிதையாய்ச் சுரந்தபோது அது காதலைப் பற்றியே பாடுவேனென அடம் பிடித்தது.

அது அந்த வயதின் தேடலென அறிந்துகொண்டேன்.

இன்றோ எனக்கும் எனது எழுத்துக்கும் வயது வந்து விட்டதால் காதல் வாழ்விலும் பார்க்கக் கொடிய சவால்களும் சோதனைகளும் நிறைந்த மனித வாழ்வின் மறுபக்கத்தைப் பாடவே என் ஆத்மா துணிந்துகொண்டது.

இது இந்த வயதின் தேடலெனத் தெரிந்துகொண்டேன்.

◈·◈·◈

நட்பு நெஞ்சங்களே!

என்னை நான் கவிஞனென்று அழைத்துக் கொள்வதில்லை. நீங்கள் அப்படி அழைப்பின் நான் உரிமையுடன் உங்களுடன் எதிர்வாதம் செய்ய வேண்டி வரலாம். ஆனால் நான் எழுதுவதைக் கவிதையென அழைக்க மட்டும் அனுமதி தாருங்கள்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தனித்துவம் உடையவர்கள். என்னைப் போன்றே என் கவிதைகளும் தனித்துவம் உடையவையாயிருக்க நான் பெரிதும் முயல்கிறேன். அதனைப் பேண முயலும்போது நான் அறிந்தோ அறியாமலோ என் மனம் கவர்ந்த பல தனித்துவங்களின் பாதிப்புக்கு ஆளானது உண்டு என்ற உண்மையையும் இங்கே ஒத்துக்கொள்கிறேன்.

◈·◈·◈

மொழிகள் உருவாகுவதற்கு முன்னரே கவிதை மானுடத்தின் மன மேடையில் ஆட்சி செய்ய ஆரம்பித்திருக்க வேண்டும்.

குழந்தைகளின் குதூகலத்தில்,

கன்னியரின் கண்ணசைவில்,

நதிகளின் சலசலப்பில்,

தென்றலின் தழுவலில்,

இன்னும் இவைபோன்ற எண்ணற்ற சௌந்தர்யங்களிலும்

ஏழையின் துயரத்தில்,

இன்னலுற்ற பெண்ணின் பெருமூச்சில்,

ஒடுக்கப்பட்ட இனத்தின் எழுச்சியில்,

இன்னும் இவைபோன்ற எண்ணற்ற கண்ணீர்த் தடங்களிலும் கவிதை ஜனித்து மானுட ஆத்மாவின் ராகங்களாக ஒலித்து வந்திருக்கிறது. மொழியற்ற மக்கள் கூட்டத்திலும் இன்று கவிதை மேடையேறி நடனமாடுகிறது என்பதை அறிவோம். பின்னைய கட்டத்தில் மொழிகள் உருவாகிக் கவிதைக்கு உயிரையும் உடலையும் கொடுத்தன.

இந்தச் சூழலுக்கு இலக்கணம் வகுக்கும் முறைமை என்று தோன்றியதோ அன்றிலிருந்து கவிதை இந்த ராகங்களின் இயற்கைத் தன்மையையும் தனது கட்டற்ற சுதந்திரத்தையும் இழந்து அதற்கு அடிமைப்பட வேண்டி வந்தது.

அன்றிலிருந்து இந்த ஆக்கிரமிப்பும் அடிமைத்தனமும் இணை பிரியாதவைகளாகி விட்டன. ஆக்கிரமிப்பு எங்குதான் இல்லை? அன்று சுற்றிய இந்த அடிமைத்தளையை முற்றாக அறுக்கும் நோக்குடனேயே கவிதையென்பது ஆத்மாவின் ராகங்களேயொழிய இலக்கணத்தின் ஆயுள் கைதியல்ல என்பதைப் பாரதியிலிருந்து புலம்பெயர்ந்த கவிஞர்கள் வரை அறைந்து கூறினார்கள். இன்றும் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

◈·◈·◈

என் இளமைக் காலத்தில் புதுக்கவிதை வந்து என் கதவைத் தட்டியபோது சிலரைப் போல் நானும் புரண்டு படுத்துக்கொண்டேன். முதற்சொன்னவாறு மூன்று தசாப்தங்களாகக் கொண்ட அறிதுயிலிலிருந்து நான் விழிக்கும் வரைக்கும் புதுக்கவிதை என் வாசலில் பழி கிடந்தது. வெளிநாட்டு வாழ்வும் அதனை மேம்படுத்த நான் முன்னிலைப்படுத்திய போராட்டங்களும் பல காலம் கவிதை உலகிலிருந்தும் பொதுவாய் எழுத்துலகிலிருந்தும் என்னைத் தனிமைப்படுத்தியபோது இவற்றின் பலத்தை விஞ்சிய எனது நட்புலகத்தின் வேண்டுகோள்கள் என்னை அடித்து எழுப்பி மீண்டும் எழுதத் தூண்டின.

நன்றி நண்பர்களே!

என் கவிதைகளை நான்

இலக்கணத்தோடு உரசிப் பார்ப்பதில்லை.
இதயங்களோடு உரசிப் பார்க்கிறேன்.

தேசங்களையும் தேசிய இனங்களையும் தரிசித்துக் கற்றவையிலும் பார்க்க என் வீட்டுத் திண்ணையிலும் நான் வாழ்ந்த கிராமத்தின் தெருப் புழுதியிலும் கற்றவைகளே இன்றும் என் கவிதைகளுக்கு முதுகெலும்பாயின.

அண்மையில் நான் பிறந்து வளர்ந்த மண்ணில் ஒரு வழிப்போக்கனாகப் பயணித்த வேளைகளில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அங்கே அவ்வப்போது இரை மீட்டிய இளவயது நினைவுகளையும் இந்நூலில் பதிவு செய்கிறேன்.

இவை அதிகம் அறியப்படாதவனின் அற்புத கணங்கள்.

இதனால் இதனை வெறும் கவிதை நூலாக அல்லாமல் ஒரு வழிப்போக்கன் தான் நடந்து சென்ற பாதையில் கண்டவற்றையும் கண்டு மனம் வெதும்பிப் போனவற்றையும் வாசகர்களாகிய உங்கள்முன் வழங்கிய வாக்குமூலமெனக் கருதிக் கொள்ள வேண்டுகிறேன்.

◈◈◈

என் மீள் பிரவேசத்துக்கு முரசு கொட்டியவர்களில் அன்பர் மேமன்கவி முன் நிற்கிறார். இங்குள்ள கவிதைகளின் ஒவ்வோர் அடியிலும் அவர் வாழ்கிறாரென்றே சொல்வேன். இந்நூலுக்கு வடிவமைப்புச் செய்வதிலிருந்து இதனை அச்சு வாகனமேற்றி வீதியுலா வரும் வரையிலான அத்தனை பணிகளிலும் எனக்கு அறிவும் ஆதரவும் தந்த வள்ளலான மேமன் அவர்களின் அன்புள்ளத்தைக் கண்டு நான் வியந்து நிற்கிறேன். அவருக்கு எப்படி என் நன்றிகளைச் சொல்வேனெனத் தெரியாமலிருக்கிறேன்.

சகோதரர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களுக்கு நான் இன்னொரு அறிமுகம் எழுதவேண்டிய அவசியமில்லை. இலங்கையின் தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள் என்ன காரணத்தால் என் எழுத்துக்களை இதுவரை கண்டுகொள்ளாமற் போனார்களென இவர் ஒருமுறை அதிசயப்பட்டதுண்டு, ஆதங்கப்பட்டதுண்டு. இப்படிச் சொன்னவரிடமே என் கவிதைகளை அலசும் பணியை ஒப்படைப்பதென அன்றே நான் தீர்மானம் செய்துகொண்டேன். அவரும் இப்பணியைப் பெருமனதோடு ஒப்புக்கொண்டார். இதுவே எனது கவிதைகளுக்குக் கிடைத்த முதல் வரவேற்பெனக் கருதுகிறேன்.

அன்பு நண்பர் அருணா சுந்தரராசன் அவர்களின் வழிகாட்டலிலும் பணிப்பிலும் அவரது வளரி எழுத்துக்கூட பதிப்பக வெளியாடாக இக்கவிதை நூலை வெளியிடத் துணிந்தமை என்பது எனக்குக் கிடைத்த இன்னொரு வரவேற்பு.

என் கவிதைகளைத் "தூக்கிப் பிடித்தாடிய" நண்பர்கள் பலர். இவர்களுள் எனது இளவயதுச் சகபாடிகளும் கொழும்பு வாழ் நண்பர்களும் முகநூல் நண்பர்களும் அடங்குவர். தம்மையும் உயர வைத்து என்னையும் உயர வைத்த உத்தம நண்பர்கள் இவர்கள். இவர்களுக்கும் இந்நூலைக் கையிலெடுத்து ஒவ்வொரு வரியையும் உள்வாங்கக் காத்திருக்கும் எனதன்பு வாசகர்களாகிய உங்களுக்கும் என் உளம் கனிந்த நன்றிகள்.

# இதற்கு மேல் என்ன வேண்டும்?

குடியிருக்கக் குடிசை
குந்தவொரு திண்ணை
படுத்துறங்கப் பாய்
படித்தறிய நூல்கள்.

பாசத்துக்கொரு பெற்றார்
ஆசைக்கொரு மனைவி
அன்புக்கொரு பிள்ளை
ஆத்திக்கொரு பெண்.

கிடைக்கும் வரை உழைப்பு
கையில் கிடைத்ததே பிழைப்பு
கிடைத்தால் உலையில் அரிசி
கிடைக்காவிடில் கிணற்றுத் தண்ணீர்.

கூடிவாழக் கிராமம்
கிராமம் நடுவில் கோயில்
கோயில் வீதியில் அரசு
அரசு நிழலில் அரட்டை.

பழகித் திரிய நண்பர்
பேசி மதிக்க ஆசான்
பாடித் திளைக்கப் பெண்டிர்
பார்த்து ரசிக்கச் சிறுவர்.

நனைந்து மகிழச் சாரல்
நினைந்து மகிழ இளமை
பகிர்ந்து மகிழ முதுமை
பாடி மகிழப் பஜனை.

சிந்தை குளிரப் பாடல்
சேர்ந்து மகிழ ஆடல்
பகிடி சொல்லப் பெண்கள்
பாதை நெடுகத் தென்றல்.

இன்றைய தினமே பெரிசு
நாளை என்பது பரிசு
அறிவு காட்டும் பாதை
ஆற்றலே எனது கீதை.

காதலில் வருவது சொர்க்கம்
கனிவால் காண்பது கடவுள்
சாதலே இறுதியில் உண்மை
கனவினில் வாழேன் திண்மை.

பொறுமைதான் எனது கோயில்
பொய்மையே அகலாப் பேய்கள்
சாதியம் அழிந்தது பரணில்
சமத்துவம் அமர்ந்தது அரணில்.

மானிடம் போற்றுதல் மேன்மை
மனிதவுயிரே என்றும் அருமை
வானமே எமது எல்லை
வாராதுகாண் என்றும் தொல்லை.

மரங்களும் உயிர்களும் சேர்
மனிதர்கள் அனைவரும் நேர்
தமிழ்மொழி அறிவே வேர்
பலமொழி அறிவே நீர்!

◈·◈·◈

## அம்மா மெத்தப் பசிக்கிறதே!

(போர் ஓய்ந்த பின் பல காலம் சென்றும் அகதி முகாம்களில் அநியாயமாகச் சிறை வைக்கப்பட்டுள்ள குடும்பங்களும் தனி மனிதர்களும் எண்ணற்றோர். அவர்களுள் பள்ளிக்கும் போகும் வயதிலுள்ள ஒரு சிறுமி தன் தாயிடம் கூறிய பாடல்)

அம்மா மெத்தப் பசிக்கிறதே
அப்பம் இருந்தால் இப்போ தா
அப்பம் இன்றேல் முத்தம் தா
அதுவே எனக்குப் போதுமம்மா!

தண்ணீர் இருந்தால் தாருமம்மா
தாகம் உடனே தீருமம்மா
தலையைக் கோதி விட்டுவிடும்
தயவாய் என்முகம் திருத்திவிடும்.

பள்ளிக்குப் போகும் நேரமிது
பாலர்கள் போவார் பாதையிலே
புத்தகம் பென்சில் நானெடுப்பேன்
பக்கத்தில் இருந்தே படித்திடுவேன்.

வானமே எங்கள் கூரையம்மா
வெண்மணலே எங்கள் கம்பளமாம்
வேலிக்கு வெளியே வேறுலகம்
வேதனை என்பதே நம்முலகம்.

இருட்டினில் வாழ்ந்தே பழகிவிட்டோம்
இருப்பதை உண்டே பசி தீர்ந்தோம்
நாளும் ஒருநாள் விடியுமம்மா
நாங்களும் மனிதர் ஆவோமம்மா!

◈·◈·◈

## மரங்கள் என் நண்பர்கள்

செழித்த இலைகளின்
சிரிப்பினில் இணைவேன்
சாயும் கிளைகளின்
இசையினில் திளைப்பேன்.

ஒழுகும் நிழலின்
அணைப்பினில் அயர்வேன்
தழுவும் இதழ்களின்
காதலில் கரைவேன்.

நகரும் செடிகளின்
நடனங்கள் ரசிப்பேன்
தவழும் கொடிகளில்
குழந்தையைக் காண்பேன்.

படரும் செடிகளின்
நட்பினில் நெகிழ்வேன்
பற்றும் கொடிகளின்
பாசத்தில் பதைப்பேன்.

மாயம் காட்டும்
மலர்களில் மகிழ்வேன்
மேப்பிள் மடியில்
மதுரத்தை உண்பேன்.

தேயும் மரங்களின்
தியாகத்தை மதிப்பேன்
தாங்கும் தண்டினில்
தந்தையைத் துதிப்பேன்.

அணைக்கும் கொடிகளில்
அன்னையை நினைப்பேன்
அமைதியின் ஆட்சியில்
இறைவனைக் காண்பேன்!

◈·◈·◈

## ஓ, தமிழகமே!

ஓ, தமிழகமே!
ஈழத்தின் தாயகமே!
நாற்பதுகளில்
நீ இயற்றிய
சத்திய வேள்வியின்
புதிய பதிப்பு
இங்கே அச்சாகிறது!

நீ மூட்டிய
பெரு நெருப்பு
பொறியாயப் பறந்து
இங்கே –
புகைந்துகொண்டிருக்கிறது!

ஈழத்துத் தமிழர்களின்
இதய கீதம்
உலகெங்கும் எதிரொலிக்க
நீ மட்டும் –
செவிடாய் நடித்துச்
சனாதிபதிப் பரிசுக்கு
ஆசைப்பட்டாயோ!

◈·◈·◈

தியாகப் பயிர்களின்
அறுவடையில்
சாதனை கண்ட
தமிழ் நாட்டில் –

தார்மீக நெஞ்சங்கள்
தூங்கிக்கொண்டா
இருக்கின்றன?

பத்திரிகா தர்மம்
போற்றுவார் இன்றிப்
பாழடைந்தா போயிற்று?

◈·◈·◈

இந்த மண்ணின்
பிரகடனப்படுத்தாத
இராணுவ ஆட்சியில் –
இளைஞர்கள் இலகுவாய்
காணாமல் போகிறார்கள்!

துப்பாக்கிச் சனியங்களின்
அத்தாணி மண்டபத்தில்
துரோபதைகள் பலர்
துகிலுரியப்படுகிறார்கள்!

◈·◈·◈

எந்த நேரத்திலும் –
எமது இல்லத்தின் கதவுகள்
இடிக்கப்படலாம்!

உடன்பிறப்புகள் –
முற்றத்திலும் தெருவிலுமாய்
இழுத்தெறியப்படலாம்!

இராணுவ மடாலயங்களில்
உயிர் போகாதபடிக்கு
உதைக்கப்படலாம்!

ஆண் உறுப்புகள் –
உருக்குக் கம்பிகளால்
துளைக்கப்படலாம்!

வெளவாலாய்த் தொங்கவிட்டு
மிளகாய்த் தூளால்
முழுக்காட்டப்படலாம்!

வாய்க்கால் ஓரங்களிலும்
வயல் வெளிகளிலும்
தெரு நாய்களாய்ச்
சுடப்படலாம்!

நகரங்கள் –
பொலிஸ் காடையர்களால்
பொசுக்கப்படலாம்!

◈·◈·◈

இது –
புதிய பரணிகளுக்குப்
பிள்ளையார் சுழி
போடப்படும்
பாரதிகள் சகாப்தம்!
சிறைச்சாலைச் சுவர்கள்
புறநானூறு பாடுகின்ற
புதியவர்கள் சகாப்தம்!

◈·◈·◈

இங்கே –
எமது சரித்திரம்
செந்நீரால் எழுதப்படுகின்றது!
தமிழகமே!
இதை நீ
தெரிந்து கொண்டதாய்க்
காட்டிக் கொண்டாலே போதும்!

◈·◈·◈

1973

## மங்கையராகப் பிறப்பதற்கே

மாவை அரைக்கிறாய்
மாவாய் அரைபடுகிறாய்
உரலில் இடிக்கிறாய்
உரலாய் இடிபடுகிறாய்
பகலில் முறிகிறாய்
படுக்கையிலும் முறிகிறாய்
பிரசவத்தின் போது
உன் புருஷன்
பிழியப் பிழிய அழுதானே
பெண்ணே நீ
புண்ணியம் செய்தவளடி!

◈·◈·◈

## பாத்ரூம் பாடகர்

பாத்ரூமில் மட்டுமே
பாடுவது என் வழக்கம்
காரணம் ஒன்று –
உள்ளே நுழைந்து
எவரும் அடிக்கமாட்டார்
காரணம் இரண்டு –
கதவுக்குத் தாழ்பாள்
கழன்று பல காலமாச்சு!

◈·◈·◈

## அரசடி வைரவர்

வைரவரே!
தெருவெல்லாம் நீ
குந்தியிராவிட்டால்
பக்தி மார்க்கம் பற்றிப்
பறையடிப்பது யார்?

ஏழையின் வயிறும்
உன் உண்டியலும்
ஒருபோதும் நிறைந்ததில்லை.

நீயொரு
பச்சைத்தண்ணிச் சாமி!
உன் கோயிலுக்குப்
புறச் சுவர் இல்லையென்று
புறுபுறுத்திருப்பாயா,
கோபுரம் கட்டவில்லையெனக்
கோபித்திருப்பாயா?

உனக்குத்
தேங்காய் அடிக்கும் கல்லையும்
எவனோ
திருடிச் சென்றுவிட்டான்.

மார்கழி மழையை விட்டால்
அபிஷேகம் என்பது உன்
அகராதியில் கிடையாது.

உன் சிந்தனையெல்லாம்
உன் கழுத்தில்
வருடத்துக்கொருமுறை விழும்
வடைமாலையின் மீதுதானா?

உன்
திண்ணையில் ஏறித்
துதித்தவர்களும் உண்டு,
தூங்கியவர்களும் உண்டு.
எல்லாரையும் ஒன்றாய் மதிக்கும்
பொதுவுடமைவாதி நீ!

யார்மீது கொண்ட
ஆத்திரத்தால் எப்போதும்
அம்மணமாய் இருக்கிறாய்?

புத்தருக்கும் உனக்கும்
அரச மரத்தை விட்டால்
ஒதுங்க இடமில்லையோ?

புத்தரிடம்
போதனைகள் இருப்பதால்
புகழப்படுகிறார்
நீயோ
போதனைகள் இல்லாததால்
பிச்சைக்காரனாய்ப் போனாய்.

தமிழனின் துயரமும்
உன் தரித்திரமும்
ஒருபோதும்
தீரப்போவதில்லை!

உன் திண்ணையில்
பள்ளிக்கூடப் பிள்ளைகள்
பரீட்சை நாட்களில்
கற்பூரம் எரித்த
காலமும் போய்விட்டது.

பணம் வந்து
படலை வாசலில்
பெல் அடிக்கிறது
புக்தி
கண்டாயத்துக்குள்ளால்
காணாமல் போய்விட்டது.

தேசம் முன்னேறுகிறதாம்
தெருக்களைப் பெருப்பிக்கிறார்கள்
புல்டோசர் வருகிறது
பேசாமல் இருக்கிறாயே!

◈·◈·◈

## விடுங்கோ ஆரோ வருகினம்!

விடுங்கோ ஆரோ வருகினம் – அங்கை
வேலிக்குப் பின்னாலை நிக்கினம்.

◈·◈·◈

அருக்குக் காட்டாதை சும்மா – உன்னிலை
ஆசையில்லாமலே வந்தனான்.
வேலிக்கு அங்காலை ஒருதருமில்லை
வீணாய்ப் பயந்து சாகாதை.

◈·◈·◈

உண்மையில் என்னிலை அன்பிருந்தால் – ஏன்
இரவிலை மட்டும் வாறியளாம் – ஒருக்கால்
பகலிலை வந்து பாருங்கோ
பல ஆக்கள் அறியக் கதையுங்கோ!

◈·◈·◈

உனக்கு அம்மா அப்பா அண்ணன்மார்
அடுத்த வீட்டிலை பெரியம்மா
இஞ்சாலை பாத்தால் கிணத்தடிதான்
எங்கை பாத்தாலும் ஆக்களெல்லோ!
ஒருக்கால் வந்தால் ஊரெல்லாம்
எங்களைப் பற்றியே கதை கட்டும்
இதுக்கெல்லாம் பயந்துதான் யோசிக்கிறன்
உன்னை வந்து காணப் பயப்பிடுறன்.

◈·◈·◈

எனக்கும் உங்களிலை ஆசையெண்டு
நினைக்காமல் பேய்க்கதை கதைக்கிறியள்
அண்டைக்கு என்னைத் தொட்டதோடை
இனியொரு மனிசனைப் பாக்கமாட்டன்.

எப்ப பாத்தாலும் இழுக்கிறதும்
இடுப்பிலை கையை வைக்கிறதும்
இதுதான் உங்கடை விருப்பமெண்டால்
இப்பவே சொல்லுங்கோ நான் போறன்.

ஊருக்குப் பயந்தால் உங்களுக்கு
என்னட்டை வரவே உரிமையில்லை
ஆருக்கு விடுறியள் விடுகையெல்லாம்
உங்கடை ஆக்களைப் பற்றி நானறிவன்.

ஓமெண்டு இப்பவே சொல்லுங்கோ
உங்களைக் காண இனி வருவன் – என்னைக்
களியாணம் கட்டினால் மட்டும்தான் – என்னிலை
கைவைக்க விடுவன் கண்டியளோ!

◈·◈·◈

கோவிக்காதை என்ரை குஞ்சு
கட்டாயம் வருவன் நாள் பாத்து
வேலையில் உன்ரை நினைவாலை
விசராய்ப் போனன் தெரியுமோடி?

நீ பாக்கிற பார்வை ஒண்டுதான் – என்னைப்
பைத்தியமாக அலைக்குதடி
பாக்கிற படங்கள் சினேகிதங்கள்
பேசுற கதையள் திருவிழாக்கள்
படுக்கிற நேரம் நினைத்தனெண்டால்
பாய்ஞ்சுவர மனம் துடிக்குதடி.

கையைத் தொடவே கோவிக்கிறை – உன்னைக்
கன்னியாகத்தான் கை பிடிப்பன்
கழுத்திலை தாலி கட்டுவன் பார்
கலங்காதையடி காத்திரடி!

◈·◈·◈

## பயிலாத பாடங்கள்

குழந்தைகளே கூறுங்கள்
குதூகலமாயிருப்பதை எங்கே கற்றீர்களென்று
கவலையால் என் வாழ்வு
கருகிப்போகிறது – உங்கள்
கலையில் ஒரு சிறிதாவது
கற்க விரும்புகிறேன்.

மலர்களே மலருங்கள்
சிரிப்பை எப்படிப் பழகினர்களென்று
பிள்ளைப் பருவத்தின்போது மட்டுமே
பொழுதெல்லாம் சிரித்திருந்தேன் – உங்கள்
செக்கச் சிவந்த இதழ்களால் சிறிதாவது
சொல்லிக் காட்டுங்கள்!

ஆறுகளே இயற்றுங்கள்
ஆற்றலும் அழகும்
எப்படி இணைய முடியுமென்று
இளவயதுக் காலத்தில்
கனவுகளையே கண்டு
காலத்தைக் கரைத்ததால்
ஆற்றலை வளர்க்க
அறிவிழந்து போனேன்.
அவசரப் படாதீர்கள்
ஆறுதலாய்ச் சொல்லுங்கள்!

எறும்புகளே அறிவியுங்கள்
ஓய்வில்லா துழைப்பது எங்ஙனமென்று
ஓரிரு நிமிடத்துக்குள்
ஓய்ந்துபோய்விடுவேன்
இளைஞனைப் போலெப்போதும்
உற்சாகமாய் இருப்பதை
ஒழிக்காமல் ஓதுங்கள்.

காகங்களே கரையுங்கள்
உடன்பிறப்புகள் இறக்கும்போது
உருகி அழுவது எப்படியென்று.
ஆயிரமாம் உயிர்கள் – போரில்
அழிக்கப்பட்ட போதும்
எனக்கென்ன வென்றிருந்தேன்.
கருணையற்ற இவனைக்
கொத்திக் கொத்திக் கூறுங்கள்.

மேகங்களே மொழியுங்கள்
விடுதலையை எப்படி
வெற்றி கொள்ளலாமென்று!
விலங்கொடிக்கத் தெரியாத
வீணர்களானோம்!
இணைந்து வாழத் தெரியாத
அற்பர்களானோம்!
எமக்குள்ளே ஒற்றுமைக்கு
நாமே எதிரியானோம்!
ஒன்றாய் வாழ்தல் எப்படியென்று
ஒழிக்காமல் சொல்லுங்கள்.

மழையே மனம் திறவாய்
மண்ணை நீ இவ்வளவு

மூர்க்கமாய் முத்தமிட
எப்படித்தான் முடிகிறது – என்
மனம் கவர்ந்த மங்கையை
முத்தமிடும் வழியை
மறக்காமல் சொல்வாயே.

பறவைகளே பாடம் நடத்துங்கள்,
பசித்தவர்களுடன் பகிர்ந்துண்ணும்
பண்பாட்டைப் படித்தறிய!
பகல்நேர வகுப்பென்றாலும் பரவாயில்லை.
உண்ணும் முன்
உறவுகளை அழைக்க
இந்த நெஞ்சிலேன் இடமில்லை?
தாராளமாக வாருங்கள் – என்
திண்ணை இங்கே தயாராக இருக்கிறது!

பெண்களே பகருங்கள் – உங்கள்
புன்னகையில் புதைந்திருக்கும் புதிர்களைப்
பகுத்தறிவது எப்படியென்று!
மௌனத்தில் மறைந்திருக்கும் மர்மத்தை
மொழிபெயர்ப்பது எவ்வாறென்று!

◈·◈·◈

## தசாவதாரம்

முட்டாள்கள் வெளியிட்ட
கவிதைத் தொகுப்புக்கு
முகவுரை எழுதியவன் நான்.

காணாமற் போனோர் சங்கத்தைக்
கட்டி எழுப்பியவனும் நானே!

முகாம் மாகாணத்தில்
பாழ்ப்பாணம் என்
பிறந்த இடம்.

காற்றுக்கும் மழைக்கும்
பிறந்தவன் நான்
ஆதலால்
அடக்கமாய் இருக்கும்போதுதான்
அழகாய் இருக்கிறேன்.

இறந்தவர் பட்டியலில்
என் பெயரைக் காணலாம்
வாக்காளர் பட்டியலிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

பட்டினி இருப்பதுதான் என்
பொழுதுபோக்கு
பாடையில் கிடக்கும்போதும்
பாடிக் கொண்டிருப்பேன்.

பல்கலைக்கழகம் போகாமலே
பட்டங்கள் எடுத்தவன் நான்.
மிருகங்களின் பெயர்களைத்தான்
முதற்பெயராய்க் கொண்டிருக்கிறேன்.

பத்துத் தடவைகள்
இரத்தம் கொடுத்திருக்கிறேன்
இரண்டு முறைகள் மட்டும்
இருதய தானம் செய்திருக்கிறேன்.

மூன்றாம் மாடியிலிருந்து-
முட்டி விழுத்தினார்கள்
மறு நாட் காலையில்
மீண்டும் உயிர்த்துவிட்டேன்.

வெலிக்கடை வேலியில்
வெட்டிக் காயப் போட்டார்கள்
விடுதலைக்கு முன்
வீட்டுக்கு வந்துவிட்டேன்.

முகாமுக்குள் வைத்து
மூச்சுத் திணற நெரித்து
மாண்ட என் உடலை
மதவுக்குள் எறிந்தார்கள்
விடியற் காலை வேளை
வழக்கம்போல் எழுந்துவிட்டேன்.

தெருவில் நிற்கிற
தேசிய உணர்வைத்
திண்ணைக்கு வரவழைப்பேன்.

ஆயுத்தை எறிந்து விட்டு
அன்பை எடுத்துக்கொள்வேன்
ஐநாவை அழைப்பதை விட்டு
அயலவரை அழைத்திடுவேன்.

மக்களாட்சி மலரும்வரை நான்
மரணிக்கப் போவதில்லை!

பிற்குறிப்பு
மூன்றாம் மாடி – கொழும்பிலுள்ள சீ.ஐ.டீ. விசாரணைக் கூடம்
வெலிக்கடை – மனிதாபிமானமற்ற இலங்கை மத்திய சிறைச்சாலை

◈·◈·◈

## சிறைச்சாலைச் செம்பருத்திகள்

அறிவும் இளமையும்
இனிமையும் இலட்சியமும்
இணைந்ததொரு
உலகம் உண்டென்றால்
மாணவர்களே,
உங்கள் இதயம்தான்
அந்த உலகமெனும்
ஆச்சரியம்!

நீங்கள் –
புத்தகங்களைச் சுமக்கும்
பார வண்டிகள் அல்லர்
பகுத்தறிவுப் பூங்காவில் மலர்ந்த
பாரிஜாதப் பூக்கள்!

நான் துள்ளித் திரிந்த காலத்தைத்
திரும்பிப் பார்க்க வைப்பவர்களே
பல்கலைக் கழகப்
படிக்கட்டுகளைப் பாய்ந்தேறுங்கள்
சட்டக் கல்லூரிச்
சறுக்கு மரங்களில்
சந்தனம் பூசுங்கள்!

அவசர உலகத்தின் பிரதிநிதிகளே,
ஆயுள் முழுவதும் கற்றாலும்

இளமைக்காலக் கல்விக்கு
இணையேதுமில்லை!

நீங்களோர் அதிசயம் மட்டுமல்ல
அரச இயந்திரத்தின்
அச்சாணிகளை உடைக்கும்
உந்து சக்திகள்!

சுதந்திரமடைந்த நாடுகள்
உங்கள் பங்கைச்
சொல்ல மறந்திருக்கலாம்
ஆனால்
அவற்றின் எழுச்சியின்
அத்திவாரமே நீங்கள்தான்.

நீங்கள் இணைந்திருக்கும்வரை
அரசியலார் ஆயுதங்கள்
இன, மொழி, மதம் எதுவும்
உங்களை
இடற வைக்கப்போவதில்லை!

அறிவுதான் உங்கள் இனம்
ஆற்றல்தான் உங்கள் மொழி
எழுச்சிதான் உங்கள் மதம்!

◈·◈·◈

அடக்குமுறையிலும் அராஜகத்திலும்
ஊறிப்போன அரசியலார்
தங்கள் சவப்பெட்டிக்குத்
தாங்களே ஆணி அடிக்கின்றார்!

அன்று மொழி அழிப்பு
நேற்று இன அழிப்பு
இன்று அறிவழிப்பு!

◈·◈·◈

மானிடத்தை மதிக்காத
மடையர்கள்
இராணுவ அரணிருந்தும்
உறங்க மறந்தார்கள்.

இனத்துவேஷ நெருப்பில்
குளிர் காயும் அரசியலார்
பிரித்தாளும் பனிமழையில்
புழுக்கம் போக்கப் பார்க்கின்றார்.

நீங்களோ –
காலியிலிருந்து
காங்கேசன்துறை வரை,
புத்தளத்திலிருந்து
பொத்துவில் வரை
அறிவுப் பட்டறைகளில்
அடிவாங்கும் உலோகங்கள்!

சிறைச்சாலை முற்றங்களில்
செம்பருத்தி நாட்டுங்கள்!
கொழும்பில் ஆள்பவர்களின்
கொம்பில் மலர் சூடுங்கள்!

மாணவர் உலகம்
எல்லையற்றது
மதக் கோட்பாடுகளால்
மாசுபடாதது

மொழி வேறுபாடுகளால்
வழி தடுமாறாதது
இனப் பாகுபாடுகளால்
இடர்ப்படாதது!

ஆகவே –
தெரிந்து கொள்ளுங்கள்,
தென் திசைத் தோழர்கள்
தோள் கொடுப்பர் நிச்சயமாய்!
வெல்லுங்கள் அவர் நெஞ்சங்களை,
சொல்லுங்கள் உங்கள்
சேனையில் சேருங்களென்று!

◈·◈·◈

## யாரடியம்மா ராசாவே?

யாரடியம்மா ராசாவே?

நான்தானம்மா ராசாவே!
உன் வீட்டில் நடந்த சங்கதி என்ன?

என் கணவனை இன்னும் காணவில்லை!

எங்கே சென்றான் உன் கணவன்?

இராத்திரி என்னோடு தானிருந்தான்
காலையில் பார்த்தேன் காணவில்லை.

காலையில் தொலைந்தான் கணவனென்றால்
மாலை வரைக்கும் என் செய்தாய்?

ஆராய்ச்சி மணி உன் வாசலிலே – இழுத்து
அடிக்கக் கயிறு எதுவுமில்லை.
மாலை வரைக்கும் காத்திருந்தென் – உன்
மாளிகைக் கதவு திறக்கும்வரை.

இரவு வந்த உன் காவலர்கள் – அவனை
இட்டுச் சென்றனர் கையுடனே.
எங்கே உள்ளான் என் கணவன்
ஒழிக்காது சொல்வாய் என் அரசே!

காவலர் கூட்டிச் சென்றாரென்றால்
காரணத்துடனே செய்திருப்பர்.

காரணம் என்ன என்றுரைப்பாய் – என்
கணவனைக் காணாது வீடு செல்லேன்!

அடாவடித் தனமாய்ப் பேசாதே – என்
அத்தாணி மண்டபம் உன் திண்ணையல்ல.
உன் கணவன் செய்தது கடுங்குற்றம்
குற்றத்தின் தண்டனை சிரச்சேதம்.
அரசுக்கெதிராய்ச் சூழ்ச்சி செய்தான்
அவனே தனக்குக் கூற்றானான்.

எங்கே உந்தன் நீதிமன்றம்
எங்கே சென்றனர் அறிவுடையோர்
விசாரணை இன்றிக் கொன்றவனே – நீ
கொற்றவன் அல்ல, கொலைகாரன்!

கண்ணகி வம்சம் நீயானால் – உன்
கனக முலையை அறுத்தெறிவாய் – என்
நகரமும் நானும் அழிந்தொழிவோம் – என
நன்றாய்க் கனவு காண்பாயே!

முலைகளை என்றோ இழந்தவள் நான்
மூர்க்கரின் கைகளில் மாண்டவள் நான் – என்
கற்பினைக் காக்க முடியாமல் – உன்
காமுகர் கூட்டத்தால் அழிந்தவள் நான்.

நீதி அறியா மன்னவனே – உன்
நாட்டினில் நெறிமுறை அழிந்தது காண்!
வீட்டினை இழந்தவர் எத்தனை பேர்
வீதியில் திரிபவர் எத்தனை பேர்

எத்தனை பெண்கள் கற்பிழந்தார்
எத்தனை கணவர் உயிரிழந்தார்
எத்தனை இளைஞர் தலை மறைந்தார்
எத்தனை வேதனை நீ இழைத்தாய்!

அறிவாய் மன்னா அரசு பிழைத்தாய்
அறமே உனக்குக் கூற்றாகும்!

◈·◈·◈

## சிறந்தது கேட்கின்

வாழும் நாடுகளில் – உன்னை
வாழவிடும் நாடுதான்
சிறந்த நாடு.

பேசும் மொழிகளில் – உன்னைப்
பண்படுத்தும் மொழிதான்
சிறந்த மொழி.

பேசவந்த வார்த்தைகளில் – நீங்கள்
பேசாத வார்த்தைதான்
சிறந்த வார்த்தை.

பாடும் பாடல்களில் – உனது
பாலர் வகுப்புப் பாடல்தான்
சிறந்த பாடல்.

கூடும் கூட்டங்களில் – உங்களில்
குறை காணாத கூட்டம்தான்
சிறந்த கூட்டம்.

நாடும் நண்பர்களில் – உங்களிடம்
நல்லவற்றைக் காண்பவர்தான்
சிறந்த நண்பர்.

செய்யும் தொழில்களில் – நீங்கள்
சேவையெனக் காண்பதுதான்
சிறந்த தொழில்.

செல்லும் பாதைகளில் – நீங்கள்
சேரிடம் அறிந்த பாதைதான்
சிறந்த பாதை.

உண்ணும் உணவுகளில் – உமக்கு
அளவான உணவுதான்
சிறந்த உணவு.

வாழ்க்கைத் துணைகளில் – உங்கள்
வலது கையாய் இருப்பவர்தான்
சிறந்த துணை.

## பருத்தித்துறை வடை

பருத்தித்துறை வடையே - வடலிப்
பனங்கள்ளுக்குத் துணையே
சந்தியிலே கடையே - பத்துச்
சதத்துக்கொரு வடையே!
ஸொய்... ஸொய்... ஸொய்...!

ஆச்சியின் உள்ளங்கையில் மாவானாய்
அடுப்பினிலே கொதிக்கும் நெய்யில் பொன்னானாய்
பருப்புகளை நொருக்கும்போது பாகானாய்
பல்லிடுக்கில் புகுந்துகொண்டால் நோவானாய்!

பருத்தித்துறை வடையே...

வயிரவரின் கழுத்தில் தொங்கும் உழுந்து வடை
வடலியிலே ஏற்றம் தரும் ஆச்சி வடை
கடற்கரையில் வாங்கித்தின்போம் கடலை வடை
கோப்பறேசன் வாசலிலே பழைய வடை!

பருத்தித்துறை வடையே...

பெட்டியிலே போட்டு வைத்தால் கல்லாகும்
போத்தலிலே மூடி வைத்தால் முறுக்காகும்
சுட்டவுடன் சுவைத்தாலே சொர்க்கமன்றோ - கள்ளுக்குச்
சுதிசேர்க்கும் வடை ருசிக்கு இணையுமுண்டோ!

பருத்தித்துறை வடையே...

கோப்பறேசன் - கூட்டுறவு கள் விற்பனை நிலையம்

◈·◈·◈

## எழுதாத கடிதத்தில்தான் எத்தனையோ உள்ளன

இங்கேயோர் அற்புதம்
இன்று நிகழ்ந்தது
நீ
சிரித்ததைக் கண்டதும்
சூரியன் மறைந்து போனான்.

நிமிர்ந்து என்னைப்
பார்த்ததைக் கண்டதும்
முழுமதி
முகில்களை அள்ளி
மூடிக்கொண்டாள்.

மறைத்துக் கொண்டவை
மலர்க் கதவுகள்தானே
திறந்துகொள்ள நான்
தென்றலை அனுப்புவேனே!

முதன்முறை உனை நான்
தொட்டபோதேன் மௌனமாயிருந்தாய்
அன்றே எனது முகத்தில்
ஓங்கி அடித்திருந்தால்
இவ்வளவுக்கு நான் கெட்டிருக்கமாட்டேன்.

முதன் முறை உன்
காதலைக் கேட்டபோது

அன்றே ஆமென்று சொல்லியிருந்தால்
இன்றைக்கு நான் எவ்வளவோ
நல்லவனாய் வந்திருப்பேன்.

தடக்கி விழுவதிலும்
ஒரு சுகமுண்டு, அன்பே
தடக்குவது உன் முந்தானை
விழுவது உன் மடியின்மீதென்றால்.

வட்டக் கழுத்தை விட்டு
எட்டிப் பார்க்குமோவென்று
ஒவ்வொரு சொல்லின் முடிவிலும்
இழுத்து விடுவாயே சேலையை!

எத்தனையாம் ஆண்டில்
இருக்கிறாய் எனக் கேட்டால்
இல்லாத கோபமெல்லாம்
காட்டி முறைப்பாய்.

என் பெயரை இவ்வளவு
அழகாக உச்சரிக்க
எங்கே நீ கற்றுக்கொண்டாய்?
உலகம் முழுவதும்
அழகர்கள் மலிந்திருக்க
என்மீதேன் பற்றுக்கொண்டாய்?

நீ சங்கீதம் படிக்கிறாயாம்
நீ வாழும் தெருவில்
வீடுகளெல்லாம் விலையேறிப்போனது
ஏனென்று இப்போ விளங்குகிறது.

ஐஸ்கிரீமைக் கண்டுபிடித்தபோது
நீ பிறந்திருந்தால் அதற்கு
உன்பெயரை வைத்திருப்பார்கள்.

பெற்றார் ஆசிரியர் சங்கத்தில்
உன் பெயரைப் பதிவு செய்தேன்
பிள்ளையின் பெயர் கேட்டார்கள்
என் பெயரைக் கொடுத்துவிட்டேன்.

ஒருகோடு மட்டுமே கீறி
ஓவியமாக்கு என்றேன்
இரு நுனிகளையும் இணைத்து
இதயம் ஆக்கிவிட்டாய்!

◈·◈·◈

# ஒரு கார் வாங்கப் போனேன்

கதவைத் திறந்துவிட்டு
காதுவரை இளித்தான்.

சேல்ஸ்மன் என்றால்
இவனைத்தான் சொல்லவேண்டும்
காரைப் போலவே இவனும்
கடைந்தெடுத்த மாதிரி.

வெள்ளைக்காரன்
காரில் மட்டும்தான்
நிறம் பார்ப்பதில்லை.

பளிங்கு நிலத்தில்
புதுமணப் பெண்ணாய்
கையில் மாலையுடன்
என்னைத்தான் காத்து நின்றாளோ
இந்த லெக்ஸஸ் தேவதை!

எத்தனை அழகு!
ஒளிவெள்ளத்தில் ஒய்யாரம்
கொடிகட்டிப் பறந்தது.
வாவென்று அழைத்தாள்
திரும்பிப் பாராமலிருக்க
நானென்ன விக்கிரமாதித்தனா?

உள்ளே நுழைந்ததும்தான் தெரிந்தது
இது காரல்ல சொர்க்கம் என்று
மேலும் கீழும்
அக்கமும் பக்கமும்
லெதரில் இழைத்திருந்தான்.

எத்தனை மாடுகள்
தோல்தானம் செய்தனவோ!

தொட்டதும் சிணுங்கியது ரேடியோ
தொடாமலே திறந்தது முகட்டுக் கூரை
ஆகாயத்தை அப்படியே
இறக்குமதி செய்யலாம்
இரவையும் பகலையும்
உள்வாங்கிக் கொள்ளலாம்.

இது என்ன வாசனை,
எதிலிருந்து வந்தது?
பெண்ணின் வாசனை
போலுமிருந்தது,
பனியில் குளித்த
பூவின் வாசனை
போலுமிருந்தது.
பேணியில் அடைத்து விற்கும்
பொய்யான வாசனை
போலுமிருந்தது.

ஆளை இழுக்கும்
வாசனை எதுவென – புதுக்
காரை வாங்கினவனுக்குத்தான் தெரியும்.

பக்கத்துவீட்டுக் காரனெல்லாம்
பீஎம்டபிள்யூவும் மெஸிடெஸ் பென்சுமாய்
பீற்றித் திரிய
நான் மட்டும் இளிச்சவாயனாய்
கிழடு தட்டிய கொரல்லாவைக்
கட்டியழுவதா?
இது என்ன நியாயம்?

ஆகவே
ஒருமுறை கொஞ்சம்
ஓட்டிப்பார்க்கலாம்
ஒத்து வந்ததென்றால்
வாங்கிக் காட்டலாம்.
அதோடு –
சும்மாதானே வருகிறது
சுதி பார்த்தால் என்ன?

பாவி மனிதா!
கன்னி மீது கைவைத்தால்
கல்யாணம் செய்தாக வேண்டும்.
ஊர்ச்சட்டம் தெரிந்ததுதானே!

கார் விஷயத்திலும்
அதுதான் போலும்.

கார் என்றால் ஆண்களுக்கேன்
இத்துணைக் காதல் உண்டாகிறது?
அதை அவன்
பெண்ணாக உருவகிக்கிறான்.
இல்லையா?

அவள் உடலின் -
வளைவுகள் நெழிவுகள்,
மேடுகள் மிதப்புகள்,
கைக்குட்டையை எடுத்து அவளைத்
துடைப்பதில் வரும் இதம்,
இருக்கையில் இருந்து
அவள் மேல் தலைசாய்க்கும்போது
உடம்பெல்லாம் ஊரும் சுகம்.

ஸ்டீரிங் வீலைக் கைகளால் தடவி
மெல்லமாய், சிமிக்கிடாமல்
மத்தியில் வந்து
மூச்சுக்காற்றால்
மேனியை உலர்த்தி
முகர்ந்து பார்த்து
மெத்தென ஒரு
முத்தம் கொடுத்து...
கிட்டத்தட்ட
உறைந்தே போனேன்!

முத்தம் கொடுத்தாயிற்று அடுத்த கட்டம்
ஓட்டிப் பார்க்கவேண்டும்,
எனக்கு இருக்கை கொள்ளவில்லை.

நான் அவளை ஓட்டினேனா,
அவள் என்னை ஓட்டினாளா?
ஆறு சிலிண்டரில்
அட்டகாசமாய் அணைத்தாள்.
இளகி இளகி மெருகேறும்
புது மனைவி - என்
ஆண்மைக்குச் சவால் விடும்
குதிரை வேகம்.

முதலிரவுதான் போங்கள்!
படுபாவி சேல்ஸ்மன்
கண்மூடி விழிப்பதற்குள்
கையெழுத்தை வாங்கி விட்டான்.

டவுன் பேமெண்ட் வேணுமாமே
இது என்ன அநியாயம்.

இதற்கும் என்னிடம்
பிளாஸ்டிக் அஸ்திரம்
பத்திரமாய் இருக்கிறது
இன்னும் ஒருமணியில்
இந்தத் தேவதை என்னவளே!
எனவே –
எடுத்தேன் தொடுத்தேன் என்பதுபோல்
எடுத்துக் காட்டினேன் வீசா கார்டை.

அட்டமி நவமியோ அமாவாசையோ
அந்த நேரமாய்ப் பார்த்து என்
செல்போன் சிணுங்கியது.

வேறு யார்?
கல்யாணம் கட்டியவனின் கடிவாளம்
எவர் கையில் இருக்கிறது?

“என்ன செய்யிறியள்,
எவ்வளவு நேரமாய்ப் போச்சு,
இஞ்சை நான் சாப்பிடாமல்
காத்துக்கொண்டு இருக்கிறன்.”

“புதுக் காரொன்று பார்த்தேனப்பா
வலு சுதியான சாமான்,

அதோடை இந்த வருசத்தான்,
அடிச்சுப்போட்ட விலைக்கு
என்ன சோக்கான லெக்ஸஸ்."

"என்ன சொல்லுறியள்?
ஏற்கனவே இரண்டு கார்
ஓடுவாரில்லாமல் இஞ்சை இழுபறிப்படுது.
காரைக் கராச்சுக்குக் கொண்டுபோனால்
திருத்திக்கொண்டு வாறதுதானே
புதுக்கார் வாங்கச் சொல்லியே
உங்களைப்
போகச் சொன்னனான்?"

சரியாகத்தான் சொன்னாள் சீமாட்டி
சுடலை ஞானம் எனக்குச்
சுணங்கித்தான் வருமாம்.

அங்கே என் பழைய கார்
அந்தரத்தில் நிற்கிறது
இங்கே புதுக்காரைப் பார்த்துப்
போதை கொண்டு நிற்கிறேன்.

நான் சேல்ஸ்மனிடம் சொன்னேன்
"கொஞ்சம் அவகாசம் வேண்டும்".
அதாவது,
அவனைப் பொறுத்தவரை
ஒரு மணியோ ஒரு நாளோ,
என்னைப் பொறுத்தவரை,
இந்தப் பக்கம் என்றுமே
தலைவைத்துப் படுப்பதில்லை.

அவனும் என்னைப்போல்
ஆயிரம்பேரைக் கண்டவன் போலும்.
பாக்கெட்டில் கையைவிட்டு
பிஸ்னஸ் கார்ட்டை நீட்டினான்.
“இந்த விலை இன்றைக்கு மட்டும்தான்,
நாளைக்கு வந்தால் வேறு விலை.
வரமுந்திக் கூப்பிடுங்கள்”.

செல்போன்காரி
சதி செய்யாது விட்டிருந்தால்
லெக்ஸஸ் கன்னி என்
காலடியில் விழுந்திருப்பாள்.
ஆனால் என்
வீசா கடன் ஒருபக்கம்
விஷம்போல் ஏறியிருக்கும்.
கார் கடன் மறுபக்கம்
கழுத்தில் விழுந்த சுருக்குத்தான்.

பெண்சாதிமாராலும் சிலவேளை
பிரயோசனமுண்டு பாருங்கோ!

◈·◈·◈

## பனிக்கால ரோஜாக்கள்

என்
வாலைப் பருவத்தின்
வஸந்த ருதுவே!

அன்றைய உன் கடிகாரம்
ஒரேயொரு நேரம்தான் காட்டியிருக்கும்
அது என்
பள்ளிக்கூடம் விடும் நேரம்.

என்
கைகளைப் பற்றுவதுபோல்
கனவுகளில் திளைத்தாயென்றாய்.

இறுதியில் –
கைகளை மட்டுமா தந்தேன்?
ஆனால் நீயோ
என்
விரல்களைத் தொடவே
வெட்கப்பட்டாய்.

பேசுவதற்கு வருவதாய்ச் சொல்லிப்
போருக்குத் தயார் செய்தவர்களைத்தான்
கேள்விப்பட்டிருக்கிறேன்

பேசவந்த போதும்
என்னைப்
பார்த்துக்கொண்டிருப்பதுவே
போதுமென்றாய்.

◈·◈·◈

சந்தியில் நின்ற சாதி
சதி செய்தது
பந்தியில் இருந்த பணம்.
பேய்க் கூத்தாடியது.

இறுதியில்
நான் ஒருவனை மணக்க
நீ ஒருத்தியை அணைக்க
காதலற்ற மணவாழ்வில்
கடமைக்கு வாழ்கின்றோம்

நம்மிருவர் நாடகத்துக்கும்
ஒருவர்தான்
கதை வசனம்
எழுதியிருக்க வேண்டும்.

அன்று
உனக்கும் எனக்கும் இடையே
ஐந்து நிமிட
பஸ் பயணம்தான்
இன்றோ
பசுபிக் சமுத்திரம்
பாயை விரித்துப்
படுத்துக்கொண்டது.

இருவேறு
கண்டங்களால்
துண்டாடப்பட்டோம்
என்றாலும்
எம்மை இணைக்க
இன்னொரு சூனாமி வரக்கூடும்.

◈·◈·◈

செத்தாலும் குடிப்பதில்லையென்று
சாராயக்கடை வாசலில் நின்று
சத்தியம் செய்தவனையல்லவா
சடங்கு செய்திருக்கிறேன்.

சாப்பிடும்போது சைகை
கூப்பிடும்போது ஓசை
இதைப் பெறவா
இவனை மணந்தேன்?

அணைத்தாலன்றோ தெரியும்
இவனிடம்
அன்பும் ஒரு மூலையில்
ஒட்டியிருக்கிறதென்று.

புணர்ந்தாலன்றோ புரியும்
பிள்ளைப் பாக்கியம்
குடும்பத்து அரசியலமைப்பில்
குடியிருக்கிறதென்று.

என்
மார்பின் அழகைப் பார்த்து
மௌனமாய் மகிழ்ந்தவன் நீ

என் மார்பில்
சிகரட் நுனியால்
சூடு வைத்தவனையல்லவா
கணவனென்ற பெயரால்
காட்சிக்கு வைத்திருக்கிறேன்.

பெண்களின் உணர்வுகளை
மதிக்க மறுப்பவர்களை
மணப்பதிலும் பார்க்கப்
பிணங்களோடு வாழ்வதே மேல்.

நீ கற்ற
மேல் நாட்டு நாகரிகம்
மொழியும்
மேனி மினுக்கலும்தானா?

மனமில்லா மணவாழ்வில்
மாண்டு கொண்டிருப்பவளை
மீட்க நீ நினைத்தால்
என் பள்ளியறை வாசலுக்கு
உன் படைகளுடன்
வந்து சேர்!

◈·◈·◈

## இறைவனைக் கண்டால்...

இனியொரு புதிய உலகினைக் கேட்பேன்
உலகம் முழுவதும் ஒரே மொழி கேட்பேன்
எல்லைகள் அற்ற நாடுகள் கேட்பேன்
எதிரிகள் இல்லா இனங்களைக் கேட்பேன்.

சமத்துவ நெறியில் அரசொன்று கேட்பேன்
சட்டங்களில்லா நீதியைக் கேட்பேன்
போர்க்குணமற்ற தலைவர்கள் கேட்பேன்
பாராளுவதிலும் பெருந்தன்மை கேட்பேன்.

சாதிகள் ஒழிந்த சமுதாயம் கேட்பேன்
சேரிகளில்லா ஊர்களைக் கேட்பேன்
செய்நன்றி மறவா அயலவர் கேட்பேன்
சுயநலம் கருதா நண்பர்கள் கேட்பேன்.

ஊரோடு உண்ணும் உறவினர் கேட்பேன்
உறவினரிடையே இணக்கத்தைக் கேட்பேன்
பொருளுடையோர்கள் பகிர்ந்திடக் கேட்பேன்
பொருளில்லாதோர் முயன்றிடக் கேட்பேன்.

வேலிகளில்லா வீடுகள் கேட்பேன்
போலிகளற்ற இதயங்கள் கேட்பேன்
பரிந்தே உதவும் தொண்டர்கள் கேட்பேன்
வாரிக் கொடுக்கும் வள்ளல்கள் கேட்பேன்.

◈·◈·◈

ஆற்றினில் வெள்ளம் அடங்கிடக் கேட்பேன்
எரிமலை தன்னுள் ஒடுங்கிடக் கேட்பேன்
காற்றிலும் மழையிலும் கருணையைக் கேட்பேன்
சமுத்திரம் அனைத்திலும் சாந்தியைக் கேட்பேன்.

ஆழியின் அகந்தை அழிந்திடக் கேட்பேன்
மாரியின் சீற்றம் முடங்கிடக் கேட்பேன்
இடிகளின் அக்கினி அணைந்திடக் கேட்பேன்
ஊழியின் உக்கிரம் ஆறிடக் கேட்பேன்.

ஓசோன் உலகைக் காத்திடக் கேட்பேன்
அழுக்கு வாய்வுகள் அழிந்திடக் கேட்பேன்
சூழலின் தூய்மை போற்றிடக் கேட்பேன்
சேற்றினைக் கழிப்போர் கற்றிடக் கேட்பேன்.

மாரிக் காடுகள் செழித்திடக் கேட்பேன்
தாதுக்கள் திரவியம் தளைத்திடக் கேட்பேன்
எண்ணெய் வளங்கள் ஊறிடக் கேட்பேன்
இயற்கையின் செல்வம் பகிர்ந்திடக் கேட்பேன்.

வாவிகள் யாவும் நன்நீர் கேட்பேன்
காலங்கள் தோறும் மாரியைக் கேட்பேன்
கடலினில் முத்துகள் மலிந்திடக் கேட்பேன்
காடுகள் கற்பைக் காத்திடக் கேட்பேன்.

தூந்தர பூமி உறைந்திடக் கேட்பேன்
துருவக் கரடிகள் தளைத்திடக் கேட்பேன்
உறைபனி விலங்குகள் வாழ்ந்திடக் கேட்பேன்
குளிர்நிலக் காடுகள் காத்திடக் கேட்பேன்.

உயிர்க்கொல்லிக் கிருமிகள் அழிந்திடக் கேட்பேன்
அண்டத்துக் கோளங்கள் ஒழுங்கினைக் கேட்பேன்
அகிலத்து வெம்மை தணிந்திடக் கேட்பேன்
ஆழியின் மட்டம் அடங்கிடக் கேட்பேன்.

◈·◈·◈

உழைக்கும் மக்கள் உரிமைகள் கேட்பேன்
உண்டு களிப்போர் உணர்ந்திடக் கேட்பேன்
பாட்டாளி வர்க்கம் இணைந்திடக் கேட்பேன்
பாரினில் செல்வம் பகிர்ந்திடக் கேட்பேன்.

தமிழருக் கென்று நிலமொன்று கேட்பேன்
நிலத்தினில் ஒற்றுமை நிலவிடக் கேட்பேன்
போரினில் நாட்டம் போய்விடக் கேட்பேன்
புரிந்துணர் நெஞ்சுடன் பேசிடக் கேட்பேன்.

கதவுகள் இல்லாக் கோயில்கள் கேட்பேன்
கோயிலில் கலைகள் வளர்ந்திடக் கேட்பேன்
சாமிமார் இல்லாச் சமயங்கள் கேட்பேன்
சமயங்கள் சாயங்கள் கலைந்திடக் கேட்பேன்.

இல்லங்கள் அனைத்திலும் திருக்குறள் கேட்பேன்
இலக்கணமற்ற கவிதைகள் கேட்பேன்
இசையினில் வாழ்வு இயைந்திடக் கேட்பேன்
ஊரெங்கும் நூலகம் அமைந்திடக் கேட்பேன்.

◈·◈·◈

பெற்றார்களிடத்தே பொறுமையைக் கேட்பேன்
பிள்ளைகளிடத்தே பணிவினைக் கேட்பேன்
பெண்களினிடத்தே எளிமையைக் கேட்பேன்
பெரியோரிடத்தே பண்பினைக் கேட்பேன்.

இளைஞர்கள் மத்தியில் எழுச்சியைக் கேட்பேன்
இல்லாதோர்க்கு இரங்கிடக் கேட்பேன்
ஏழைகள் முயற்சியில் ஏற்றத்தைக் கேட்பேன்.
இரந்தே வாழ்பவர் ஒழிந்திடக் கேட்பேன்.

அகமுடையாளிடம் அடக்கத்தைக் கேட்பேன்
அணைப்பவன் மனதில் அன்பினைக் கேட்பேன்
இரவிலும் பகலிலும் ஒருமனம் கேட்பேன்
இருவரின் போக்கிலும் பொறுமையைக் கேட்பேன்.

பெண்களுக்குரிமை பிறப்பிக்கக் கேட்பேன்
ஆண்களின் கற்பு உரைத்திடக் கேட்பேன்
மனையாளின் மனதை அறிந்திடக் கேட்பேன்
மங்கையைத் தாயாய் மதித்திடக் கேட்பேன்.

காதலுக்கென்றொரு கடவுளைக் கேட்பேன்
கன்னியர் நெஞ்சினில் கருணையைக் கேட்பேன்
காளையர் பெண்களைப் புரிந்திடக் கேட்பேன்
களவியல் வாழ்விலும் கண்ணியம் கேட்பேன்.

மானுடம் மதிக்கும் மனிதர்கள் கேட்பேன்!

◈·◈·◈

## புதுக் கணக்கு

கொஞ்சம் அன்பு
கொஞ்சம் சிரிப்பு
கொஞ்சம் கனிவு
இவை போதும்!
உங்கள் புதிய ஆண்டு
பூத்துக் குலுங்கும்!

இன்றைய தினத்தின் வெற்றி
இருபது நிமிட உடற்பயிற்சியில்
ஆரம்பிக்கிறது!

பெரிதாகக் கனவு காண்
சிறிதாகத் துவங்கு!

எந்த வேலையிலும்
இனிமை இருக்கிறது
கண்டுபிடிக்கும் வரைதான் வேலை
கண்டுபிடித்ததும்
வழியெல்லாம் சோலை.

சில வேளைகளில்
உன் உழைப்புத் திறன்
ஓய்வில்தான் தங்கியுள்ளது.

உன் வேலையை ஒருவர்
பறிக்கப் பார்க்கிறார்.
அவரேன் நீயாக இருக்கக்கூடாது?

◈·◈·◈

ஒவ்வொரு நாளும்
ஒரு பத்துப் புதியவர்களைப்
புன்னகையால் மகிழ்விப்பாய்
ஆசீர்வாதம் என்பது
காற்றிலும் கலந்து வரும்.

புன்னகை ஒன்றுதான்
நிச்சயமாய்
வட்டியோடு திரும்பிவரும்
முதலீடு.

புன்னகையே
காதலுக்குப் போடும்
பிள்ளையார் சுழி.

சிரிக்கத் தெரிந்தவனுக்கும்
வைத்தியர் வீட்டுக்கும்
வெகு தூரம்.

நகைச்சுவை மட்டுமே
சாப்பாட்டுக்கு முன்பும்
சாப்பாட்டுக்கு பின்பும்
எடுக்கக்கூடிய ஒரே மருந்து.
மூன்று முறை மட்டுமல்ல
முன்னூறு முறையும்!

மழலைகளின் முகத்திலும்
முதியவர்களின் முகத்திலும்
புன்னகையைக் கண்டிருப்பாய்
இவர்கள் –
கடவுளுக்குக் கிட்டே இருப்பதால்
கவலை இல்லாதவர்கள்!

◈·◈·◈

கடவுளை மறந்தாயோ இல்லையோ
கடன் தந்தவனை மறவாதே.

மன்னித்தவர்களின் பெயரை
மனதில் வைத்திரு
மன்னிக்க வேண்டியவர்களை
மறந்து போய்விடு.

பிறக்கும்போது
பசியால் அழுகிறோம்
இறக்கும்போது
பசி தீர்ந்தும் அழுகிறோம்.

ஆசைகள் அற்றவனுக்கு
இறப்பு ஒரு இனிய விடுதலை!

கறுப்பு நிறமென்று
கலங்குகிறாய்
வெள்ளைச் சிரிப்பை
ஏன் மறந்தாய்?

தேநீர் வேளையில்
தபால்காரன் வந்தால்
அவனுக்கும் ஒரு கோப்பை

அருந்தக் கொடுங்கள்.
நாளைக்கு வருபவன்
நண்பன் மட்டுமே!

தயவுசெய்து என்ற சொல்லை
தயங்காமல் பாவியுங்கள்
நன்றி என்ற சொல் எப்போதும்
நாவில் இருக்கட்டும்.

மாதத்தில் ஒரு நாளாவது
மாமிசத்தை ஒதுக்கிவை
மிருகங்கள் உன் பெயரை
மரங்களில் செதுக்கி வைக்கும்.

ஒரு மிருகத்தின் இறைச்சியை
உண்டு மகிழ்ந்த கையால்
இன்னொரு மிருகத்தோடு விளையாட
உனக்கு உரிமை இல்லை, நண்பா!

மனிதர்களைக் கொன்றவனை
மிருகம் என்கிறாய்
மிருகங்களைப் பழிக்காதே!

மனிதன் ஒவ்வொருவனும்
காந்தியாகத்தான் பிறக்கிறான்
குணத்தாலும் கொள்கையாலும்
கோட்சேயாக இறக்கிறான்.

இளமைக்கு
வயதெல்லை கிடையாது
எண்பதுக்குப் பிறகு

கொஞ்சம்
ஓய்வெடுக்கக் கூடும்.

உனக்கு ஒரு பொருள் வாங்கும்போது
உன் மனைவிக்கு
இரண்டு பொருள் வாங்கு
தாம்பத்தியம் நிச்சயம்
தப்பிப் பிழைக்கும்!

மனைவியோடு ஒட்டிப் படு
மிச்சமெல்லாவற்றையும்
மனைவியே பார்த்துக்கொள்வாள்.

மனைவியிடம்
மற்றப் பெண்களைப் புகழ்ந்தாயோ
தொலைந்தாய்!
மற்ற ஆண்களைப் புகழ்ந்தாலும்
தொலைந்தாய்!
அவளிடம்
அவளையே புகழ்ந்தாயோ
ஒவ்வொரு இரவும்
முதலிரவு!

◈·◈·◈

ஜனவரி 1, 2013

# மரங்களை நேசிப்போம்!

போன பிறப்பில்
மரங்களைப் பாடாமல்
மாண்டு போனதால்
தேவர்கள் என்னைத்
திருப்பி அனுப்பி விட்டார்கள்!

◈·◈·◈

இறைவன்
தனக்காகக் கட்டிய கோயில்களே
மரங்கள்.

இயற்கை
வரைந்து பழகிய ஓவியங்களையே
இறைவன் தன்
கோயில்களாக்கிக் கொண்டான்.

◈·◈·◈

வீதியோரத்து விளம்பரங்களில்
மரங்களே நீங்கள்தான்
மிக அழகானவை.

மரங்கள் –
காற்றைப் பக்கவாத்தியமாக்கி
இசைப்பதுதான் ஒரு நாட்டின்
முதலாவது தேசிய கீதம்.

புயல் வீசும்போதெல்லாம்
பூக்களையும் இலைகளையும் உதிர்த்து
நிறுத்தென்று வேண்டி
இயற்கைக்கு அர்ச்சனை செய்யும்.

மரங்கள்தான் மனிதனின் சார்பில்
இறைவனிடம் தூது போகின்றன
மரங்களை வெட்டியதற்கு
மன்னிப்புக் கேட்டு.

இயற்கையின் அனர்த்தங்களிலிருந்து
மரங்களைக் காத்த இறைவன்
அவற்றை
மனிதர்களிடமிருந்து காப்பாற்ற
மறந்து போனான்.

உலகத்தில் எல்லா அதிசயங்களுள்
மரங்களே தம்மைத்தாம்
பராமரித்துக் கொள்ளும்.

பழைய பொருட்களை நேசிக்கிறவர்கள்
மரங்களை மட்டும் ஏனோ
மறந்து விடுகிறார்கள்.

◈·◈·◈

மரத்தை வெட்டி விழுத்தி விட்டு
மரமிருந்த வீதிக்கு அந்த
மரத்தின் பெயரைச் சூட்டுகிறார்கள்
மடையர்கள்.

மாம்பழத்தைத் தின்ற
மனிதனைப் பார்த்து மரம் சொன்னது

என்னை வெட்ட விரும்பாதது போல்
ஏனைய மரங்களையும் வெட்டாதே, மனிதா!

மனிதா, எப்போ
கடைசி மரத்தையும் நீ அழிக்கிறாயோ
அன்றே நீயும் அழிந்து போகிறாய்!

◈·◈·◈

மரங்களே,
உங்கள் மடிதான்
அகதிகள் அரசாங்கத்தின்
அத்தாணி மண்டபங்கள்
அங்கமிழந்த குமரிகளின்
அந்தப் புரங்கள்
அழும் குழந்தைகள் தூங்கும்
அசையாத தூளிகள்.

ஆலமரங்களே,
உங்கள் கிளைகளில் தொங்குவன
விழுதுகள் மட்டுமல்ல
வாழ்விழந்த பெண்களும்தான்.

அன்று சங்கமித்தை
ஒரு கிளைதானே கொண்டுவந்தாள்
இன்று இலங்கை முழுவதும்
போதி மரங்கள்
பூத்துச் சொரிகின்றன.
பௌத்தம்தான் பட்டுப்போய்விட்டது!

◈·◈·◈

இன்று நீ நடும்
ஒவ்வொரு மரத்துக்கும்
உன் சந்ததி நாளைக்கு
நன்றி சொல்லும்!

நீ நடும் ஒவ்வொரு மரத்தின் கீழும்
உட்காருவாய் என்பது நிச்சயமில்லை – ஆனால்
உன் வாழ்க்கையின் அர்த்தமே அதுதான்.

நாளை நீ இறப்பாயானால்
இன்று செய்ய வேண்டியது
ஒரு மரத்தை நடுவதே!

எல்லாருக்கும் பயனுள்ளவனாக நீ
இருக்கவேண்டுமென விரும்பினால்
அடுத்த பிறப்பில்
மரமாகப் பிறந்துவிடு!

◈·◈·◈

மரங்கள் தம்
மலர்களைக் காட்டுவது தம்
மகிழ்ச்சியைக் காட்டவே!

ஒவ்வொரு முறையும் நான்
மரத்தின் நிழலை நாடும்போது
மரம் சொல்கிறது
என் அழகைப் பார்க்காதே
என் கீழேயுள்ள வேர்களைப் பார்
அழுக்காய் இருப்பவைதான்
அழகை ஏந்துகின்றன.

மரங்களுக்கு
நீண்ட ஆயுள் இருப்பதன் ரகசியம்
அவை எப்போதும்
யோகத்தில் இருப்பதினால்தான்!

நினைவிற் கொள்
மரத்தின் கீழ்
வீணாக்கிய நேரம்
நன்றாகவே வீணாக்கப்பட்டது.

◈·◈·◈

## நீறு பூத்த நெருப்பு

பாலைவனத்தின்
பகல் வெப்பத்தை
உணர்ந்ததுண்டா?
பாடல்களில்
ஒப்பாரி மட்டுமே
பாடுவோரைக் கண்டதுண்டா?

ஆறோடும் அழகை
இரசித்திருப்பாய் நீ
குருதி ஓடிய ஆறைக்
கண்டிருப்பாயா?

சுதந்திரம் அற்றவர்க்கு
வாசல் கதவு எதற்கு?
செல்லுமிடம் அற்றவர்க்குச்
சுதந்திரம் எதற்கு?

சீனாவில் வீட்டுக்கொரு எஞ்சினியர்
எங்களுக்கு வீடென்பதே கிடையாது!

இஸ்ரேலுக்கு மட்டுமே சொரியும்
ஐநாவின் விந்து – அதில்
இலங்கைக்கும் கொஞ்சம்
சுவறுவது முண்டு.

எரிகிற நாட்டில்
பிடுங்குகிறது இந்தியா – அது
இலங்கையில் செய்வது
வியாபாரம் அல்ல –
விபச்சாரம்!

புரிந்துகொள்,
பெற்றோல் இல்லாத
நாட்டின் சார்பில்
போர் தொடுக்காது அமெரிக்கா – எனவே
புட்டிசம் போடுவதில்
பயனில்லை நண்பா!

ஒட்டாவாவும் வாஷிங்டனும்
ஒன்றென்று அறிந்துகொள்
இஸ்ரேலின் கைப்பொம்மைகள்
இவைகளேன்று தெரிந்துகொள்!

ஆப்கானிஸ்தானில் குழந்தைகள்
அன்னையின் தாலாட்டுக்குப் பதில்
துப்பாக்கி வெடிகளைக் கேட்டே
தூங்கப் பழகிக்கொண்டார்கள்.

◈·◈·◈

## என் தங்கை

தங்கையென்றால் எனக்குத்
தாளாத அன்பு கேளீர்!
தம்பிமார் தோள்களென்றால்
தங்கைமார் துணிவு அன்றோ!

என்தங்கை என்னைப் போல்
இருப்பாளென் றெண்ணாதீர்
அம்மாவைப் போல் மிகவும்
அழகாகத் தானிருப்பாள்.

அம்மா தன் அழகையெல்லாம்
அவளுக்கே எழுதிவைத்து
நாளெல்லாம் மிளகாய் சுற்றி
நாவூறு தீர்த்து வைப்பாள்.

கண்ணுக்கு மை வேண்டாம்
கழுத்துக்கு நகையும் வேண்டாம்
காதிலுள்ள வளையமொன்றே
காணும் இவள் அழகுக்கு.

கோயில் மதிலிடுக்கில்
குடியிருக்கும் வெள்ளைப் புறா
குத்து விளக்கின் மேல்
குவிந்திருக்கும் செம்பருத்தி.

தையல் பெட்டிக்குள்
தினமிருக்கும் நெல்லிக் காய்
பாடப் புத்தகத்துள்
புன்னகைக்கும் மயில் இறகு.

தேனில் குழைத் தெடுத்தும்
திகட்டாத தெம்மாங்கு
வானை விட்டிறங்கி
வளைய வரும் வெண்ணிலவு.

அள்ளி முடித்த கூந்தலில்
அரங்கேறும் கனகாம்பரம்
கதிரவனை வரவேற்கக்
காத்திருக்கும் மாக் கோலம்.

வளையல்கள் ஒதுங்கி நின்று
வாய்விட்டு நகையெழுப்பும்
விரல் யாவும் மருதாணி
விருந்தாடித் திளைத்திருக்கும்.

பாவாடை தாவணியில்
பவனி வரும் மகாராணி
செல்லும் இடமெல்லாம்
சிம்மாசனம் சேர்ந்து வரும்.

அப்பாவின் அதிகாரமெல்லாம்
அலுவலகத்தோடு மட்டும்
அம்மாவின் அரசாட்சி
அடுக்களையோடு நின்று விடும்.

என் தங்கை ராச்சியமோ
ஊரெல்லாம் தூள் பறக்கும்
கோயிலுக்குப் போக வர
கொடிபிடித்து முன் செல்வேன்.

நண்பர்கள் வந்து கேட்டால்
நம்பும்படி பொய்கள் சொல்வாள்
கவலைக்கு மருந்து கேட்டால்
காதலிக்குத் தூது போவாள்.

தலையிடி வந்தால் போதும்
தலைமாட்டில் இருப்பாள் தானாய்
காய்ச்சலில் விழுந்தாலோ என்
காலடியில் கண் துயில்வாள்.

ஆசிரியனாய் நின்றென்னை
அதட்டவும் செய்வாள் நாளும்
அன்புடைத் தோழியுமாய்
ஆறுதலும் தருவாளன்றோ!

காலையில் போனால் நேரம்
கடந்துதான் வருவேன் வாசல்
கதவடி தேய்ந்து போகும்
கால்களும் சோர்ந்து நோகும்
கண்களில் நீரைத் தேக்கிக்
காத்திருப்பாளென் செல்லம்.

பாட்டொன்று பாடு என்றால்
பாரதியை முதலழைப்பாள்
கண்ணன்மேல் உள்ள காதல்
கண்களில் கனவாய் மிதக்கும்.

கொஞ்சும் குரலினிமை
கொள்ளை கொள்ளும் சொல்லினிமை
பண்ணின் பொருளினிமை
பாவையிவள் பண் இனிமை.

காற்றினிலே வரும் கீதம்
கனிந்துருகப் பாடுகையில்
கண்களில் நீர் வடியக்
காலடியில் நானிருப்பேன்.

கால்விரலில் கல்லிடித்து
குருதி சொட்டுத் கசிந்ததற்கு
அம்மாவிடம் ஓடிப் போய்
அழுதழுது சொன்னவளே!

பற்களொன்றும் முளைக்காத
பருவத்தில் நானுனக்கு
சப்பிக் தந்த கச்சானை
எச்சிலென்றும் பாராமல்
எத்தனை முறை தின்றிருப்பாய்!

ஆயிரம் பெயர்கள் சொல்லி
அழைத்திடு வேனெனினும் அவளின்
“அண்ணா!” எனும் சொல்லில் மட்டும்
அகிலமே அடங்குமம்மா!

என்முன் துயிலெழுந்து
எனை எழுப்புவாள் என்றும்
மறந்துதான் போகாள்
மல்லிகையால் எனை வருட.

பெரியபிள்ளை யானபோது
பெற்றோரை வணங்கும் முன்னால்
வந்தென் பாதம்தொட்டு
வணங்கியதை மறப்பேனோ?

தங்கையே உனைப் பிரிந்து
தனியனாய்ப் போகேன் தாயே
என்தலை எழுத்திதென்றால்
எழுதியவனையே கொல்வேன்.

தங்கையே உயிரே உன்னைத்
தாயாகக் கொண்டேனம்மா
அன்பையே தந்து என்னை
ஆட்கொண்டு விட்டாயம்மா!

இயமன் என் உயிரைத்தேடி
ஏமாந்து போவான் காண்பீர்!
என்னுயிர் என் தங்கையிடம்
இருப்பதை அறிந்திடாமல்.

◈·◈·◈

## 21-12-2012

(இன்றோடு உலகம் அழியப்போகிறதென
எல்லாரும் பயந்தவொரு நாளில் எழுதியது.)

இருபத்தியோராம் திகதி!
இரயில் நிலையம்
ஒளியில் திளைக்கிறது.
கூட்டத்தில் ஒருவனாய் நான்...

விறைத்துப்போன மேனி,
உறைந்துபோன குருதி,
பழகிப்போன காலை!
எல்லாமாய் நூறு பேர்,
கூட்டத்தில் ஒருவனாய் நான்...

உத்தியோகத்து எருமை மாடுகள்,
பல்கலைக் கழகப் பைத்தியங்கள்,
பங்குக் கம்பெனி பண முதலைகள்,
பள்ளிக்கூடத்துப் பயம் அறியாததுகள்...
இப்போது
என்னோடு இருநூறு பேர்.
கூட்டத்தில் ஒருவனாய் நான்...

பயணிகள் முகங்களில்
பயம் கலந்த புன்னகை
நன்றாய்த் தெரியும் இவர்கள்

குளிரால் நடுங்கவில்லை!
இரயில் நிலையம்
வழக்கம்போல்
ஒளியில் திளைக்கிறது.
இருபத்தோராம் திகதி பற்றி
எதுவுமே அறியாத மாதிரி!
கூட்டத்தில் ஒருவனாய் நான்...

தூரத்தில் –
ரயிலொன்று வருகிறது
விளக்கில் நம்பிக்கை
வேகத்தில் உறுதி.

வந்த ரயில்
வழுக்கியபடி நிற்கிறது.
வந்திருந்த கூட்டமெல்லாம்
ஒழுங்காய் அமைதியாய்
இடிபடாமல் ஏறுகிறது.
இரண்டு நிமிடங்களில்
இந்த நாளை நோக்கி
எதிர்பார்ப்புடன் பயணிக்கிறது!

இப்போது
ஒவ்வொருவர் முகத்திலும்
எவ்வளவு குதூகலம்!
காலத்தை வென்ற களிப்பு!
இந்த நாள்
எவ்வளவு இனிமையானது!

மனிதன்
காலண்டரைக் கண்டுபிடித்தது
காலத்தைக் கணக்கிடத்தான்.
காலண்டர் மனிதரின்
காலனாக வருவதற்கல்ல!

◈·◈·◈

## யுத்த காண்டம்

அவன் எப்போதுமே
நெருப்பாய் இருப்பான்
நான் நீராய் இருப்பதால்
அவனை அணைக்க முடிகிறது.

என்னிடம் நீரின் இருப்பு
ஆவியானபோது மட்டும்
அவனுடன் சேர்ந்து
எரிந்துபோகிறேன்.

எரிந்து போவதற்கு
எவ்வளவு
இனிமையான வழி!

இளமை
இளமையிடம் தோற்றுப்போவதிலும் ஒரு
இனிமை இருக்கிறது!

பெண்
தான் விரும்பியவனிடம்
தோற்றுப்போவதில் திருப்தியடைகிறாள்
துகிலுரியப்படுவதில்
தென்றலை அனுபவிக்கிறாள்!

அதனாலே
இது என்றும்
முடிவடையாத யுத்தம்.
தோற்றவர்களிடம்தான்
வெற்றிக்கொடி தரப்படும்
விநோதமான யுத்தம்!

அவன் அரசனாகத்தான்
ஆட்சி செய்கிறான்
ஆனால்
அதிகாரம் என்னவோ
இவளிடம்தான் இருக்கிறது.

மன்னவனே!
உன்னிடம் மண்டியிடுபவர்களை
மறந்துவிடு
இப்போது
மண்டியிடு என் முன்னே!

இதோ
செங்களுநீர்ப் பூக்கள் மிதக்கும் வாவி
கரை புரண்டு வழிகிறது.
மூழ்கு
மூழ்கி எழுந்தபின்
என் மார்பில்
முகம் துடை!

சோர்ந்த உன் கைகளால்
என் உடல் தழுவு
உன் மூச்சுக் காற்றால்
என் மேனியை உலர்த்து!

உறங்கு
என் பிள்ளைபோல்
மடியில் உறங்கு
விடியும்வரை உறங்கு!

நாளை மறுபடியும்
போருக்குத் தயாராவாய்.
எனினும்
இவளைப் புரிந்துகொண்டால் மட்டும்
இந்தப் போர்க்களத்தில்
உனக்கு இடமுண்டு.

இவள் நெஞ்சு
அடைக்கலம் கேட்டவனுக்கு
அரண்மனை!
அனுபவிக்க வந்தவனுக்கு
ஆயுள் தண்டனை!

சட்டங்களையும் சம்பிரதாயங்களையும்
சாட்சிக்கழைக்காதே
பெண்ணைப்
போதைப் பொட்டலமாய்ப் பார்க்காதே
இவள் புணர்ச்சி யந்திரமல்ல,
பாரிஜாத மலர்!

தெரிந்துகொள்!
மாசற்றவள்
மனதாலும் பொசுக்குவாள்!

◈·◈·◈

# தோசைக் கடை

நோபல் பரிசுப் பட்டியலில்
பத்து வருசமாய் இருக்கிறதாம்
பருத்தித்துறைத் தோசை.

தோசைக் கடைக்கு இங்கே
வழி கேட்கத் தேவையில்லை
வாசமே உங்களை
வழிகாட்டி இழுக்கும்.

தெருவோர வேலியில்
திட்டி வாசலொன்று
குனிந்து இருளில் பார்த்தால்
கழுத்துத்தான் தெரியும்
தோசைக்காரியின் கழுத்து!

தோசைக்காரி பெரும்பாலும்
வாய்க்கொழுப்புக்காரி
கொழுவுப்பட்டீர்களோ
கடதாசிக்குப் பதிலாகக்
கந்தபுராணத்துக்
கடைசி ஒற்றையில்தான்
தோசை சுற்றித் தருவாள்.

இதுதான்
பருத்தித்துறைத் தோசை!

தோசையின்
சுவையும் மாறாது
சுட்டவளின்
வசையும் மாறாது!

◈·◈·◈

## வாழ விடுங்கள் எங்களை!

போதும்!
பேக்டரிப் பிட்டுக் குழல்களே
புகை எழுப்பியது
போதும்!

பாதாள வாய்க்காலிலும்
பின்வாசல் வழியாலும்
நாளெல்லாம் கழிக்கிறீர்கள் தீழ்ப்பு,
நாறிப்போகிறது நம் சூழல்!

ஆகவேதான் –
வாழப்போகும் சந்ததிக்காக உங்களுடன்
வழக்காட வந்திருக்கிறேன்.

மாந்தரின்
உயிருக்கு உலைவைத்தே
உயரப் பார்க்கிறீர்கள்
தேசத்தை வளர்ப்பதென்று
நாசத்துக்கு வழிவகுப்பதா?

இரசாயன வாயுக்களை
இரகசியமாய் புதைப்பதற்கு
வானத்து வெளிகளையா
வாடகைக்கு எடுத்தீர்கள்?

அமில மழை பொழிந்து
பயிரெல்லாம் அழிகிறதே
ஒரு கணமாவது இந்த
உழவர்களின் உழைப்பை
எண்ணிப் பார்த்தீர்களா?

ஆற்றோரங்களிலும்
வாவிக் கரைகளிலும்
வாவென்று அழைக்கிறதே
வானவில்லின் வர்ண ஜாலம்
உங்கள் அழுக்கு நீர்
இவ்வளவுக்கு ஏன் அழகாய் இருக்கிறது?

காற்று இன்று ஏன்
கனத்துப்போனது?
என்
கண்களில் நீர் வடிந்து
செம்மை படர்கிறதே!

நன்னீர் வாவிகளில்
நஞ்சைக் கலக்கிறீர்கள்
ஏற்கனவே
செத்துப்போன மீன்களை நம்பியா
இந்த
மீனவர்கள் வாழுவது?

மாரிக் காடுகளை
மாளச் செய்கிறீர்களே
அருகிவரும் உயிரினங்கள் உங்கள்
அறிவுக்கு எட்டவில்லையா?

தூந்தர பூமி ஏன் தேய்த்து போகிறது?
துரவக் கரடிகள் ஏன் அழிந்து போயின?

வானத்தின் குரல்வளையை
வலிதாய் நெரிக்கிறீர்கள்
மூச்சுத் திணறுவது
முதலில்
மரங்களும் செடிகளும்
மழலைகளுமே என்பதை
மறந்தா போனீர்கள்?

மரங்களைப் பாருங்கள்
மலர்களைப் பாருங்கள்
தென்றலை எம்மீது பூசும்
தூரிகைகளல்லாவா அவை?

ஆறுகளைப் பாருங்கள்
ஏரிகளைப் பாருங்கள்
மழைத்துளிகளை எம்மீது தடவும்
மயிலிறகுகளல்லவா அவை?

வானம் இருமுகிறதே
ஏனென்று கேட்டீர்களா?
பூமி சுடுகிறதே
போய்த் தொட்டுப் பார்த்தீர்களா?

அங்கே பாருங்கள்
ஆழியின் மட்டம்
ஓங்கி வளர்கிறது.
எந்த நேரமும் அது
கரைகளை விழுங்கலாம்,

தேசங்களின்
வரைபடங்களைத்
தலைகீழாய் மாற்றலாம்.

தொழில் வளர்ச்சி அவசியமே,
யார் இல்லையென்றார்கள்?
வேலை வாய்ப்பும் வேண்டியதே
வேண்டாமென்றா சொல்கிறோம்?

ஆதலால்
பேக்டரிக்கு உள்ளே மட்டுமன்றி
பேக்டரிக்கு வெளியேயும்
புதுமைகளைச் செய்யுங்கள்
உற்பத்திக் கழிவிலிருந்து
அற்புதங்கள் செய்யுங்கள்!
புகைக்குப் பதிலாகப்
புன்னகையைத் தவழவிடுங்கள்!

◈·◈·◈

# ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்

புத்தர் பெருமானே!
தெருவெல்லாம் நீ
தியானத்தில் இருக்கிறாய், உனது
தேசமோ
தீப்பற்றி எரிகிறது.

உனது
பல்லைப் புதைத்த இடத்தில் உனது
சொல்லையும் புதைத்து விட்டார்கள்.

உன்மீது
அரசியல் சாயம் பூசப்பட்டதால்
உனது
உபதேசங்களும்
அரசியலாகி விட்டன.

இனி நீ
கண்ணைத் திறந்தாலும்
இங்கு யாரும்
கண்டுகொள்ளப்போவதில்லை.

இவர்களிடம் அன்று
சுதந்திரம் மட்டுமே
சொத்தாக இருந்தது.

இன்றோ நாளையோ
அதுவும் பறிபோய்விடும்.

சீனா
செல்வத்தைச் சுரண்டுகிறது
அமெரிக்கா
இதயத்தையே சுரண்டுகிறது!

◈·◈·◈

நோயின் பிடியில்
நலிந்தவரைக் கண்டு
சிந்தை கலங்கிய
சித்தார்த்தனே!

நீ அரச பதவியைத் துறந்து
துறவறம் பூண்டாய்
ஆனால் இங்கே
துறவறம் பூண்டவர்கள்தான்
அரசியலை நடத்துகிறார்கள்.

நீ போதித்த
அன்பையும் அகிம்சையையும்
அநாதையாக்கிவிட்டு
ஆயுதங்களுக்குப் பூசை செய்கிறார்கள்.

இதனால்
அடக்குமுறை ஆட்சியில்
அன்றாடம் மனிதர்கள்
இலகுவாய்க்
காணாமல் போகிறார்கள்.

நீயிருந்து தியானித்த
போதிமரங்களின் கீழ்
புதை குழிகளும் இருக்கலாம்.

சீவகாருண்யம் இங்கே
சீனத்துச் சரக்காகி விட்டது,
அகிம்சை என்பது
அங்காடிகளில் தொங்குகிறது.

ஆயுதங்களை
இறக்குமதி செய்து
அகதிகளை
ஏற்றுமதி செய்கிறார்கள்.

புத்தர் பெருமானே நீ
சிலையாய் இருப்பதனால்தான்
இங்கே உன் போதனைகளை
விலை பேசுகிறார்கள்.

◈·◈·◈

ஒருகால் அமைதியும் அழகும்
ஆட்சி செய்த உன்
மண்ணை மிதிக்கும் போதெல்லாம்
மனம் நொந்துபோகிறேன்.

ஆற்றாமையால்
என் இதயம்
இடிந்த சுவராகிறது.

தேசபிதா தோன்றாத நாட்டில்
தான்தோன்றித் தலைவர்கள்
துள்ளி விளையாடுகிறார்கள்.

நீதிமன்றங்களின்
அத்திவாரமே
ஆட்டம் கண்டுவிட்டது.
கறுப்புச் சட்டைகளுக்குள்
காடையர்கள் புகுந்து கொண்டார்கள்.

செருப்பில்லாமல்
நடப்பவனின் காலில்
சேறு மட்டுமல்ல
இந்த நாட்டின்
சீரழிவும் ஒட்டிக்கொள்கிறது.

எங்கெல்லாம்
மண் மனிதர்களால்
மிதிக்கப்படுகிறதோ
அங்கெல்லாம்
மனிதர்கள் மனிதர்களால்
மதிக்கப்பட வேண்டும்.

ஆனால் இங்கே
மனிதர்களும்
மிதிக்கப்படுகிறார்கள்!

கருணை மிகுந்த கௌதமரே
இம்மக்களுக்காக நீ
உனக்குள்ளேயே நீ அழுவது
உலகமெல்லாம் கேட்கிறது.

◈·◈·◈

## எழுதிக் கிழித்த கடிதம்

மடியில் தலை வைத்தால்
முடிகோதி இமைகோதி
முத்த மழை பெய்து
முகமெல்லாம் நனைத்திடுவாய்.

கடற்கரையில் கடலை வாங்கக்
காசில்லை என்றதற்கு
கழுத்துச் சங்கிலியைக் கழற்றித்
தந்தவளே நீதானே!

காசில்லாதவனென்று
கணக்கிலேடுக்க மறுத்தாரே – நீ
காணாமற்போன பின்னால்
காசெல்லாம் குவிந்தது
உன் படம் அதில்
இல்லாமல் போனதால்
செல்லாமல் போனது.

இரணைமடுக் குளத்தில்
சுழிகள் மட்டுந்தான்
உன் வீட்டிலோ
சுழிகளோடு முதலைகளும்.

கதவைத் திறந்து வந்தவனைக்
கண்டதுண்டமாய் வெட்டிக்
கோடிப்புறம் புதைத்தார்கள் – என்

கண்கள் மட்டும் எப்படியோ தப்பி – உன்
கட்டிலின் கீழ் ஒழித்துக்கொண்டன.

◈·◈·◈

கீரிமலைக் கடலோரம்
கைகோர்த்து நிற்கையிலே
சூனாமி எங்கே
சூல் கலைந்தா போயிற்று?

குறிஞ்சிக் குமரனிடம்
கால் நோக நடக்கையிலே
குன்றின் மேலிருந்து
குதிக்காமலேன் வந்தோம்?

ஒரு அதிகாலை விமானத்தில்
ஏறிச்சென்றதை அறிவேன்
ஒருகோடி மைலுக்கப்பால் நீ
ஒழிந்து கொண்டதை அறியேன்.

நீயேறிய விமானம் – என்
நினைவுகளின் பாரத்தால்
நிமிர்ந்தெழவே மறுத்திருக்கும்
நீ நடந்த பாதையில்
நீர்கோர்த்த புற்றரை
நெஞ்சார அழுதிருக்கும்.

சந்திரனில் இருப்பாயானால்
சத்தியமாய் வந்து சேர்வேன்
சொந்தங்களின் காவலென்றால்
சோர்ந்து நடைப் பிணமாவேன்!

◈·◈·◈

## தட்டி வான்



தட்டி வான்

தமிழகத்து நண்பர்களுக்கு:- இப்படத்திலுள்ள வேன் இலங்கையில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குமுன் இறக்குமதிசெய்யப்பட்டதாக அறியப் படுகிறது. இது யாழ்ப்பாண மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் சிலவேளை வெறுப்புக்கும் பாத்திரமானதோர் வாகனம். இத்தனியார் வாகனம் தனது பின்பகுதியிலும் பக்கவாட்டிலும் தட்டி (தடுப்பு) போன்றே தோன்றுவதாலும் அதைக் கட்டுவதற்கு வேண்டிய குறுக்குத் தடிகளுடன் இணைந்திருப்பதாலும் மக்களிடம் தட்டி வான் என்ற செல்லப் பெயரை எடுத்திருக்க வேண்டும்.

இதைத்
தட்டி வான் என்பார்கள்.
நானோ
ஏழை உழைப்பாளிகளின்
இடர் துடைக்க வந்த
இந்திர விமானமென்பேன்.

பஹூம்! பஹூம்!
இதோ
தட்டி வான் ஹோர்ன் அடித்துத்
தூள் பறக்க வருகிறது.

வாசல் படியில்
கட்டிய சாரம் அவிழ்ந்துவிழக்
கூவுகிறான் கொண்டக்டர்!

"நெல்லியடி-கொடியாமம்!
உடுப்பிட்டி-யாப்பாணம்!
ஐச்சுவேலி-தெல்லிப்பழை!
மானிப்பாய்-சங்கானை...!"
தட்டி வான்
தடம் பதிக்காத
தெரு இங்கே
எதுவுமில்லை.

வாவென்று கேட்டால்
கிளிநொச்சிக்குக் கூடக்
கதறக் கதற ஓடும்
என்றுமே சாகாத
இயம வாகனம்!

திருமண வீட்டுக்குத்
தாலியை மறந்தாலும்
தட்டி வானை
மறந்திருப்போமா?

மழையையும் வெயிலையும்
உள்ளிருந்தே அனுபவிக்க
எவர் விடுவார்
இப்படியோர்
ஆனந்த வாகனம்?

இருபதுபேர் மட்டும்
இருக்கக்கூடிய இருக்கைகளில்
இருநூறு பேரை
ஏற்றிக் காட்டுவான்
கொண்டக்டர்
கோதாரியிலை போவான்.

தட்டி வானே-
என்றாலும் உனக்கு
என்றென்றும் நன்றி.

நீ
சாமானிய தமிழனின்
சில்லறைகளை நம்பிச்
சவாரி செய்தவனல்லவா?

எங்கள் தெருக்களில் நீ
ஓடித் திரிந்ததால்தான்
யாழ்ப்பாணம் அன்று

வாழ்ப்பாணம் ஆகியது
இல்லையேல்
என்றோ அது
கூழ்ப்பானை யாயிருக்கும்.

ஐம்பது ஆண்டுகள்
அலற அலற
ஓடித் திரிந்தும்
உன் உடம்பு ஒருபோதும்
ஒரேயடியாய் வீழ்ந்ததில்லை.

உன்னைப் படைத்த
அமெரிக்க கம்பெனியையே
பிரமிக்க வைத்த
புஷ்பக விமானமல்லவா நீ!

வெட்ட வெட்டத் தளைக்கும்
வாழை கூட
ஒரு நாள்
வாடி விழுந்துவிடும் – நீயோ
வருடங்கள் பல கடந்தும்
இளமையாய் இருந்து
கிழடுகளைக் காதலித்தாய்.

பொலிசுக்கு டிமிக்கி கொடுப்பதில்
பட்டம் எடுத்தவனே
பெட்றோல் இல்லாத
போர்க் காலத்திலும்
புதுமைகள் செய்தவன் நீ!

நீ ஓடாது போயிருந்தால் –
சுன்னாகத்து மாம்பழங்களைச்
சுமந்து வருவது யார்?

செம்பியன்பற்றுச் சுறா மீனைச்
சுவைபார்த் திருப்போமா?

கொடிகாமத்துத் தேங்காய் இன்றிக்
கோயில் தேர் நகர்ந்திருக்குமா?

நீர்வேலி வாழைக்குலைக்கு
யார் இங்கே வண்டில் விடுவார்?

கரணவாய்ப் புகையிலை
கனவாய்த்தான் போயிருக்கும்!

தீவகத்துக் தலங்களுக்குத்
தீர்த்த யாத்திரை போயிருப்போமா?

கீரிமலைக் கடற்கரையில்
கள்ளுக்கு முன்னேயும் பின்னேயும்
கிரியைகள் செய்திருப்போமா?

வல்லிபுரக் கோயிலின்
தளிசைக்காரிகளுக்கு
துணைபோவது யாராம்?

செல்வச் சந்நிதிக்குக்
கடலைக்காரி முதல்
கரகம் காவடி வரை
கொண்டுபோய்ச் சேர்த்தவர்
யாரென்று கேட்கிறேன்.

தாராள மனமுள்ள
தட்டி வானே
உன்
துயரையும் நானறிவேன்.

மெட்டி அணிந்த மங்கையர்
உன் பலகைத்
தட்டில் ஏறியதில்லை.
சேலை உடுத்தியவர்கள் உன்னைச்
சேர நினைப்பதில்லை.
டியூட்டரிக் குமரிகள் உன்னைத்
திரும்பியும் பார்ப்பதில்லை.

குறுக்குக் கட்டிய பெண்களும்
கடகம் தூக்கிய கிழவிகளுமே
உன் கைபிடித்த
ஐஸ்வர்ய ராய்கள்!

துயரப்படாதே தட்டி வானே,
தமிழனின்
மூச்சிருக்கும் வரை
உன்னைப் பற்றிப்
பேச்சிருக்கும்!

## காதலாகிக் கசிந்து

மேகங்கள் அனைத்தும் மலையினில் மோதி
மெலிதாய்த் தவழ்கிறது – என்
மோகங்கள் அவளின் மார்பினில் மோதி
முகையாய் அவிழ்கிறது.

அவிழ்கிற கூந்தலில் ஒழுகிற நீரலை
இடையினை அணைக்கிறது – அவள்
இதழ்களில் துடிக்கும் இளமையின் தாபம்
இதயத்தைப் பிணைக்கிறது.

பிணைந்திடும் போழ்தில் பகிர்ந்திடும் போதை
பொங்கிச் சரிக்கிறது – அவள்
பார்வையில் தெறிக்கும் பருவத்தின் செய்தி
பாயை விரிக்கிறது.

விரிகிற முல்லை விழிகளின் வழியாய்
வீசிடும் மின்னலைகள் – வாயின்
வார்த்தைகள் இன்றிக் கண்களின் ஊடே
வழங்கிடும் சொல்லலைகள்.

சொல்லிய தெதுவும் புரிவது இன்றிச்
சேர்ந்திடும் காற்றினிலே – வானில்
சிறகினை விரித்துப் பறப்பது தானே
சிறந்தது காதலிலே!

◈·◈·◈

## பேப்பர்காரன்

வாசலில் பேப்பர்காரன்.
பேப்பர், புத்தகங்கள்
பாத்திரங்கள், போத்தல்கள்
பழையதெல்லாம் வாங்குவான்
பாவம் பழைய பேப்பர்காரன்!

தராசு படி உண்மை இல்லை
பேச்சிலும் உண்மை இல்லை
இவை இரண்டும் உண்மையானால்
இவன் வீட்டில் உணவு இல்லை.

டீவியில் எங்கள் சனாதிபதி,
பேப்பர்காரன் பரவாயில்லை!

◈·◈·◈

## முந்தானை முடிச்சு

கட்டிலாயிற்று கடற்கரையாயிற்று
பொட்டலாயிற்று புல்வெளியாயிற்று
எங்குமே உனது முந்தானைதான்
எனது மரகதக் கம்பளம்.
கைக்குட்டையையும் கடதாசியையும் தேடுவானேன் – உன்
முந்தானை நுனியில் எல்லாமேயுண்டு.

◈.◈.◈

## பிரிந்தும் பிரியாமல்...

கனவினில் கரைந்தது இளமை
வாழ்வின்
கடைசியில் தெரிவதே உண்மை
இதழ்களால் செய்ததோர் யுத்தம்
இதுதான்
என்றுமே மாறாத பந்தம்.

இன்றும் எனை நீ விரும்புகின்றாயா - உன்
இதயத்தில் எனக்கொரு இடம் தருவாயா - உன்
கண்களால் என்னைச் சிறை பிடிப்பாயா - என்
கன்னத்தில் முத்தங்கள் கடன் தருவாயா?

மணமாலை சூடியபின்தான்
தொடவிடுவேன் என்றாய்
மனங்களால் புணர்ந்ததை
எதிலே சேர்த்தாய்?

தூர இருப்பதால்
துயரம் கொண்டாயோ
தென்றலைத் தூதிடத்
தெரிந்து கொள்ளாயோ!

ஏழை மனமென எண்ணிச் சென்றாயோ
இதய மலரை வாடச் சொன்னாயோ
எத்தனை ஆண்டுகள் காத்திருந்தேன் - உன்
இனிய முத்தத்துக்காய் ஏங்கி நின்றேன்

எங்கு இருக்கிறாயென
ஒருசொல் எழுதும் - என்
இறுதி மூச்சாவது
உனை வந்து தழுவும்!

◈·◈·◈

## ஆயுதம் செய்வாய்

(போர் ஓய்ந்தது, ஆனால் புயல் ஓய்ந்தபாடில்லை. வன்னியின் விளை நிலத்தில் விலைமாதுகளை விதைக்கிறார்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். ஆதரவற்ற பெண்களின் கற்புக்கு விலை பேசும் இக்கயவர்களை இனங்கண்டு இளம் பெண்கள் தம்மைத் தாமே காப்பாற்ற வேண்டுமென்று கோரி இக்கவிதையை வரைந்தேன்.)

நீ நினைக்கிறாயா
உனக்கு இனி
எவருமே இல்லையென்று,
தவிக்கிறாயா
தனியனாய்ப் போனாயென்று?

பெண்ணே,
பைத்தியமா உனக்கு?

காணாமற் போனது
உன்
கணவன் மட்டுமே
கரங்களல்ல
கனவுகளுமல்ல.

உன் அகராதியில்
அபலை என்ற சொல்லிருந்தால்
உடனே அதை அழித்துவிடு!
பாவம், பேதை, பெண் ஜென்மம்
என்றிருந்தால் அந்தப்
பக்கத்தையே கிழித்துவிடு!

கழுத்தில் தொங்குவது
மாங்கல்யமா
மறைத்து வை!
பதிலுக்குப்
புன்னகை இருக்கிறதுதானே
போட்டுக்கொள்!

போனவனுக்குப்
பகைவர்கள் பலரிருக்கலாம்.
போனவன் போனவனே
ஆகையால்
புலம்புவதை நிறுத்து!

இனியும்
உன்னையே நீ வருத்துவதில்
அர்த்தமே இல்லை.
உன்னையே நீ
அடித்து எழுப்புவதில்தான்
ஆரம்பமே இருக்கிறது.

தெரிந்துகொள்,
தாலி
பெண்ணுக்கு
வேலியாயிருந்த காலம்
காவியக் காலம்.

இது
கலிகாலத்துக்கு அடுத்த
காடையர்கள் காலம்.
காவி உடுப்புக்குள்ளும்
கோவலன்கள் உலாவும்
கொள்ளையர்கள் காலம்!

அன்று
சேல்பட்டு அழிந்தன
வன்னியின் வயற் பொழில்
இன்று கயவரின்
கண்பட்டு அழிந்தன
கன்னியர் கற்பு.

பெண்களைத்
தாயாக மதிக்காது
தாயாக மாற்றும்
வள்ளல்கள்
திசைதோறும் நாறுகிறார்கள்.
மூக்கை மூடிக்கொள்
கண்ணை மட்டும் திறந்துகொள்.

கடவுள்கள் உன்னைக்
காப்பாற்றப்போவதில்லை
அறிந்துகொள்,
ஏழையாய்ப் போனாலும் நீ
கோழையாய்ப் போய்விடவில்லை!

போர் கண்ட மண்ணுக்கு நீ
புதியவளல்ல, பெண்ணே!
பட்டினி கிடந்து
பழகிப்போனவள்தானே,
பசி வந்தபோதும்
பணியாது வாழ்ந்து கொள்!

மறந்துவிடாதே,
மௌனம்தான் உன்
முதல் எதிரி!
உடலுக்குத் துணி
உள்ளத்துக்குத் துணிவு!

நாளைக்கென்றிருக்காதே
இன்றே உன் கரங்களை
எடுத்துப் பார்
அவையே உனக்கு இனி
உதவப் போகும் தோழர்கள்!

◈·◈·◈

## சுடலை ஞானம்

நல்லவனென்று பெயரெடுக்க
நாளெல்லாம் முயன்று பார்த்தேன்,
இறக்கப்போகும் வயதில்தான்
உண்மையை அறிந்துகொண்டேன்.
நல்லவற்றைச் செய்துதான்
நல்லவனாக வேண்டியதில்லை.
கெட்ட செயலெதுவும்
செய்யாதிருந்தாலே போதும்,
நல்லவனென்ற பெயர்
நாளடைவில் வந்துவிடும்!

◈·◈·◈

## வாழ்க்கை என்பது என்ன?

பாடி ரசிக்க வேண்டிய பாடல்
பகிர்ந்து உண்ணுதற்கரிய உணவு
விளையாடித் திளைக்க வேண்டிய விளையாட்டு
மார்தட்டி எதிர்கொள்ள வைக்கும் சவால்
நனவாக்கி மகிழ வேண்டிய கனவு
அர்ப்பணித்துப் பெருமைப்படக் கூடிய தியாகம்
ஒவ்வொரு விநாடியும்
உணர்ந்து அனுபவிக்க வேண்டிய காதல்.



ராஜாஜி ராஜகோபலன்!
ஈழத்திலிருந்து 80களில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். சட்டத்தரணி.

எழுபதுகள் தொடக்கம் எஸ்.ராஜகோபாலன் என்ற அடையாளத்துடன் ஈழத்துத் தமிழ் ஆக்க இலக்கியத் துறையில் தனது பங்களிப்பை சிறப்பாக ஆற்றி வருபவர்.

மல்லிகை, அலை, வீரகேசரி, தினகரன் போன்ற சஞ்சிகைகள் பத்திரிகைகளில் அவை வெளிவந்துள்ளன.

ஆனால், அன்றைய காலகட்ட ஈழத்துப் புனையாக்க விமர்சனத்துறை இவரைக் கவனிக்கத் தவறிவிட்டது என்பது விசனத்துக்குரியது.

“ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்” எனும் இத்தொகுப்பு தமிழ் இலக்கிய உலகில் இவரைப் பரவலாக அறிமுகப்படுத்தும் ஒரு முன்வாசல் எனலாம்.

விரைவில் வெளிவரப்போகும் இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு தமிழ் இலக்கியத்துறையில் இவர் ஆற்றிய, ஆற்றிவரும் பங்களிப்பின் வீச்சை மேலும் விசாலமாக எடுத்துக் காட்டும் என்பதே என் கணிப்பு!

-மேமன்கவி-

வளரி
எழுத்துக்கூடம்